# உறவுகள்

*Uravukal*

சித்திரை வைகாசி ஆனி 2023

இதழ் 86

Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை


ஆண்டவர் தோற்றுவித்த
வெற்றியின் நாள் இதுவே
இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம்.



மண்ணின் மாட்சி இன்று விண்ணை அடைந்தது, ஆர்ப்பரித்துப் பாடு!

உறவுகள்
Uravukal
2023

**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: சில்வெஸ்ரர் தம்பிராசா - மறையாசிரியர்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி: தயாளினி வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: லூசியா மேரி
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**மறையாசிரியர்:** திரு: ரி. எம். சந்தியாகு

**தொடர்புக்கு:**

**« URAVUKAL »**
**Aumônerie Tamoule Catholique Srilankaise**
**Chapelle Notre Dame Réconciliatrice**
**57, Bld de Belleville**
**75011 Paris - France**

**Tel:** 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org

**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரான்ஸ்

No 86
2022

**சந்தா விபரம்**
தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

**கணினி வடிவமைப்பு:** றெஜீனா சிவகுமாரன்
www.uravukal.org
இணையதள பதிப்பாசிரியர்

## ஆசிரியர் எண்ணம்

### கடவுளைத் தேடுவோம்!

இறை இயேசுவின் இதயத்திற்கு நெருக்கமான இறை உறவுகளே! உங்கள் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் உரித்தாகுக!

நாம் கடவுளால் உருவாக்கப்பட்டவர்கள்! இன்று கடவுளைத் தேட மனம் இல்லாமல் எமது எண்ணப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதற்கான காரணம், கடவுள் இல்லாதவற்றை கடவுளாக எண்ணி நமது நிலையை மறந்து வாழ்ந்து கொண்டிருப்பதேயாகும். அதனால் தான் வாழ்வில் எத்தனையோ பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றோம்.

உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவரை மட்டுமே ஆராதிப்பாயாக! (மத்தேயு 4:10) என்ற இறைவார்த்தைப் பகுதி கூறுவதற்கு ஏற்ப, நாம் அவரைத் தேடி ஆராதிக்கும் போது நிச்சயமாக அவரைக் கண்டடைய முடியும். பிரச்சனைகளில் இருந்து விடுபட முடியும்.

நாம் அப்பா என்று கூப்பிடக் கூடியவர், அம்மா என்று சாயும் போது ஆறுதல் தரக்கூடியவர் எங்கள் இயேசு கிறிஸ்துவே! அது மட்டுமல்ல, நல்ல சகோதரனாக, சகோதரியாக, நண்பனாக இந்த உலகிலுள்ள எந்த உறவாகவும் நாம் அவரோடு பழக முடியும். நல்ல ஆண்டவர் நமக்கு நன்மையை மாத்திரம் செய்வார். ஆகவே, அவரை தேடி நமது பாதுகாப்பை, சந்தோசத்தை உறுதிப்படுத்துவோம்.

இன்று பாவத்தின் கட்டுக்களை அகற்றியவர், மரணத்தை தோற்கடித்தவர், எம் இயேசு எம் மத்தியில் பிரசன்னமாக இருக்கிறார். "அவர் உங்களுக்கு முன் கலிலேயாவுக்கு போகிறார்" என்ற இறைவார்த்தை, கடவுள் எம் மத்தியில் பிரசன்னமாக இருக்கிறார் என்பதனை உறுதிப்படுத்துகின்றது. உங்கள் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் நல் வாழ்த்துக்களை கூறி நிற்கின்றேன்.

உலகின் ஒளி நானே! என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார். வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார். (யோவான் 8:12)

அன்னையின் பரிந்துரையில் ஆண்டவர் உங்களை எப்போதும் காப்பாராக!

**உறவில் நிலைக்கும்,**
**அருள்பணி: போல் மத்தியு மதன்ராஜ் அ.ம.தி.**

# திருபாவலைவன்



தொடர்ச்சி.......

புனித வளனாரின் ஏழு மகிழ்ச்சிகள்!

### 4. இயேசுவின் மீட்புப் பணியை முன்னறிதல்

ஒரு வசதிபடைத்த யூதனாய் இல்லாமல் இரண்டு மாடப் புறாக்களை மட்டுமே காணிக்கையாய் அளிக்கக் கூடிய தனது வறியநிலை வருத்தத்தை ஏற்படுத்தினாலும், யோசேப்பு இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தபோது மகிழ்ந்தார். சிமியோனின் வார்த்தைகள் அவரது உள்ளத்தைக் கிழித்தெடுத்த அதே வேளையில் அன்னாவின் அருள்மொழிகள் அவருக்கு ஆனந்தம் அளித்தன. இயேசுவின் மீட்புப்பணி விளைவிக்கப் போகும் விந்தையை அன்னா விவரித்தார். அவர் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த எல்லாரிடமும் அக்குழந்தையைப் பற்றிப் பேசினார். (லூக். 2:38) அப்போது யோசேப்பு அகமகிழ்ந்தார். உண்மையான மகிழ்வு பெறுவதில் அல்ல, கொடுப்பதில் தான் என்பதை யோசேப்பு உணர்த்துகிறார் இயேசுவை மீட்புப்பணிக்காகக் கையளித்துபோது.

### 5. எகிப்திய சிலைகள் இயேசுவின் பாதத்தில் வீழ்தல்

பிறந்த குழந்தையையும், அதன் தாயையும் இரவோடு இரவாக எகிப்துக்கு அழைத்துச் சென்றபோது அங்கலாய்த்துப் போயிருப்பார் யோசேப்பு. ஆனால் அதிலும் ஒரு மகிழ்வு கண்டார். “விரைவாய்ச் செல்லும் மேகத்தின்மேல் ஏறி ஆண்டவர் எகிப்துக்கு வருகிறார். எகிப்தின் சிலைகள் அவர் திருமுன் அஞ்சி நடுங்கும். எகிப்தியரின் உள்மனமே உருக்குலையும்.” (எசா. 19:1) என்கிற இறைவாக்கு நிறைவேறுவதை உணர்ந்து யோசேப்பு மகிழ்ந்திருப்பார். தன்னைச் சோர்வும், களைப்பும், அச்சமும் ஆட்கொண்டிருந்தாலும் தரணிக்கு நிகழப்போகும் நன்மை அவரை மகிழச் செய்திருக்கும். எகிப்தின் சிலைகள் எல்லாம் இம்மானுவேல் இயேசுவின் முன் வலுவிழந்து போவதை எண்ணி யோசேப்பு உள்ளத்தால் மகிழ்ந்து நின்றார்.

### 6.இயேசு-மரி-சூசை - திருக்குடும்ப வாழ்வு



ஏரோதுக்கு அஞ்சி எகிப்தில் தங்கிய நாட்களைக் கடந்து இஸ்ராயேலுக்குத் திரும்பிவர பணிக்கப்படுகிறார் யோசேப்பு. மீண்டும் களைப்பை ஏற்படுத்தும் கடினமான பயணம் யோசேப்புவை கலக்கம் அடையச் செய்தபோது தான் அவருக்கு ஆறாவது மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்தக் களைப்பு மிகு பயணத்தின் முடிவில்தான் இயேசுவோடும், மரியாவோடும் சூசை தொடங்கிய திருக்குடும்ப வாழ்வு சாத்தியமானது. ஆண்டவருடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்து முடித்தபின் அவர்கள் கலிலேயாவில் உள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிச் சென்றார்கள். குழந்தையும் வளர்ந்து வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது. (லூக் 2:39) கருத்தாய் கடமையாற்றுவதாலும், ஆண்டவருடைய திருச்சட்டப்படி வாழ்வதாலும் ஏற்படுகிற மகிழ்வுக்கு ஈடு இணையில்லை என்பதை இந்நிகழ்வு உணர்த்துகிறது.

### 7. இயேசுவைக் கண்டடைந்த மகிழ்ச்சி.

சங்கடங்கள் எல்லாம் ஒருவழியாய்த் தீர்ந்தன எனச் சற்றே நிம்மதியடைந்த யோசேப்புவுக்குக் காத்திருந்தது அடுத்த அதிர்ச்சி. எருசலேம் கோவிலுக்குச் சென்று திரும்புகிற போது இயேசுவைத் தொலைத்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி அவரை வாட்டி வதைத்தபின்னர் கிடைத்தது தான் ஏழாவது மகிழ்ச்சி. “மூன்று நாட்களுக்குப் பின் அவரைக் கோவிலில் கண்டார்கள். அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார்”. (லூக். 2:46) நேர்மையான தேடலுக்குப் பின்னர் ஞானத்தையும், ஞானத்தின் ஊற்றாகிய இறைவனையும் கண்டடையும் மகிழ்ச்சியே உச்சபச்ச மகிழ்ச்சி என்பதனை யோசேப்புவின் ஏழு மகிழ்ச்சிகளும் நமக்கு உணர்த்துகின்றன.



ஆக, இறைவனிடமிருந்து பெறப்படுகிற தெளிவினால் ஏற்படும் மகிழ்ச்சி, காமக்களிப்பைத் தாண்டிய தூய மகிழ்வு, பெறுதலைக் காட்டிலும் கொடுத்தால் கிடைக்கும் மகிழ்ச்சி, தரணியின் எழுச்சியில் நமது பங்களிப்பால் ஏற்படும் மகிழ்ச்சி, கருத்தாய்க் கடமையாற்றித் திருச்சட்டத்தின்படி ஒழுகுதலால் உண்டாகும் மகிழ்ச்சி, ஞானத்தையும், ஞானத்தின் ஊற்றாகிய இறைவனையும் கண்டடையும் முழுமையில் எய்துகிற மகிழ்ச்சியென ஏழுநிலை மகிழ்ச்சிகளை அனுபவித்த நேர்மையாளரான புனித யோசேப்பு நமக்குச் சொல்லித்தரும் பாடம் இதுதான் இறைவன் தரும் மகிழ்வும், அமைதியும் உலகம் தரும் அமைதியைப் போன்றதோ, பணம், பதவி, பகட்டால் உண்டாகும் மகிழ்வைப் போன்றதோ அன்று.

இறையாட்சியை மண்ணில் விதைக்க வந்த இயேசுவின் வரலாற்று சிலுவையடியில் முழுமை பெற நமக்குத் தரப்பட்டிருக்கிற இக்காலத்தில், புனித வளனாரின் ஏழு மகிழ்ச்சிகளும், புனித பவுலடியாரின் வார்த்தைகளும் நமக்கு உணவாகட்டும். “இறையாட்சி என்பது நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாகத் தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டது” (உரோ. 14:17) அத்தகைய இறையாட்சி நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் இவ்வுலகம் முழுமையிலும் கிறீஸ்துவின் உயிர்ப்பால் நிகழட்டும்.

# சீரமைக்கும் செயல்பாடுகள் செழிப்புற்று பலன் தரவே

**சீரமைக்கும் செயல்பாடுகள் செழிப்புற்று பலன் தரவே**
செப உதவி வேண்டிடுவோம் செய் நன்றி கூறிடுவோம் !
ஊரமைக்கும் திட்டமெல்லாம் ஒத்துவரா சூழ்நிலையில்
ஒதுங்கிநின்று உலகத்தை உற்று நோக்கி செயல் புரிவோம் !
வராதது வந்ததுபோல் வரும் நல்ல வாய்ப்புகளும்
வந்து நம் கதவுகளை வழக்கம் போல் தட்டுவதை
பாராது இருந்திடாதீர் பணிவாக வேண்டுகிறேன்
பார் காக்கும் திட்டங்களை பண்புகளால் நிறைவேற்றுவோம் !

**உறவுகள் வழிநின்று உழைப்பினை தொடர்ந்திடுவோம் !**
ஊக்கமாய் பெரியோர் சொல் உசிதமாய் கேட்டிடுவோம் !
துறவு நிலை கொண்டோர்க்கும் துணை நின்று திரு அவையை
தூக்கியே நிறுத்திடுவோம் தூதுப்பணி தினம் செய்து
அறப்பணிகள் பெரிதாக ஆற்றிட முடியாவிட்டாலும்
அடக்கமாய் எளியவழி அன்புப்பணி புரிந்திடுவோம் !
புறத்தூய்மை காப்பதுடன் பொலிவுறும் அகத்தூய்மையின்
புனிதத்தை அணிந்து கொண்டு புது புவியை அமைத்திடுவோம் !

**கூடொருங்கியக்கம் கண்டு கொள்கையை வகுத்துக்கொண்டு**
குடும்பமாய் கூடி நின்று குயவன் கை களிமண்ணாய்
நாட்டையும் வனைத்திடுவோம் நாகரீகம் காத்திடுவோம் !
நற்செய்தி வழிநின்று நலம்பேணும் மொழி சொல்வோம் !
வீட்டையே சான்றாக்கி வெற்றியில் பயணிப்போம் !
வேலைகளை ஒழுங்காக்கி விடியலை கண்டிடுவோம் !
சாட்டையை எடுத்துனாம் சாடும்முன் மற்றவரை
சற்று நமை நினைத்திடுவோம் சரித்திரம் படைத்திடுவோம் !

**நமையழைக்கும் பாஸ்காவில் நல் உழைப்பை தந்திடுவோம் !**
நானிலத்தை புத்துப்பிக்க நமையளித்து மகிழ்ந்திடுவோம் !
சுமை இறக்கும் சுதன் பணியில் சுறுசுறுப்பாய் துணை நிற்போம் !
சொல்லுவார் நமை நாளும் சொந்தமாய் கொண்டாடி
தமை மட்டும் நினைத்து நிதம் தன்னலத்தில் சுருங்கிடாமல்
தரணியை காக்கும் பெரும் தத்துவத்தின் விளக்காவோம் !
இமை காக்கும் விழிகளென இருந்து நாம் எந்நாளும்
இறை கரத்தின் கருவியாய் இருப்பதிலே பெருமை கொள்வோம் !

**எல்லார்க்கும் எல்லாமாய் இருந்திட அழைப்பு தரும்**
இயேசுவை இதயத்தில் ஏந்தியே வாழ்ந்திடுவோம் !
நல்லாரின் அறிவுரையை நயந்து நாம் பெற்றிடுவோம் !
நாள்தோறும் அருளோடு நலப்பணிகள் குவித்திடுவோம் !
பொல்லார்க்கும் புரியும் வண்ணம் புதுவழியை காட்டிடவே
புறப்படுவோம் இன்றே நாம் புவி நமக்கு கரம் கோர்க்கும்
இல்லார்க்கும் இருப்போருக்கும் எப்போதும் நம் பணிகள்
எட்டிடவே நமையீந்து இலக்கினில் பயணிப்போம் !

**மறையாசிரியர் தி. ம. சந்தியாகு,**
**வேங்கிடக்குளம் இந்தியா**



## திருமொழிகள் (தந்தை)

**தந்தை** இருந்தால் பாரமில்லை.
**தந்தை** காட்டும் பாதை தூரமில்லை.
**தந்தை**யின் கண்ணில் ஈரமில்லை.
**தந்தை** போல உலகில் யாருமில்லை.
**தந்தை**யின் பாசத்தில் பேதமில்லை.
**தந்தை**யைப் படி புத்தகம் தேவையில்லை.
**தந்தை** சொல்லைவிட வேதமில்லை.
**தந்தை** சொல்படி கேள் சோகமில்லை.
**தந்தை**யை போல் ஆசானில்லை.
**தந்தை**யை பலரிங்கே அறியவில்லை.
**தந்தை**யின் மொழி புரியவில்லை.
**தந்தை** பிள்ளைகள் முன் அழுததில்லை.
**தந்தை**யை மகன் தொழுததில்லை.
**தந்தை**யை விட ஆதாயம் பெரிதில்லை.
**தந்தை**க்கு ஒரு தாலாட்டு இல்லை.
**தந்தை**யை யாரும் பாராட்டவில்லை.
**தந்தை**யின் வேர்வை உறையவில்லை.
**தந்தை**யை பலர் உணரவில்லை.
**தந்தை**யை விட கங்கை புனிதமில்லை.
**தந்தை**க்கு முன் எதுவுமில்லை.
**தந்தை**யின் அன்புக்கு எல்லையில்லை.
**தந்தை**யை நேசி தொல்லையில்லை.

அனைத்து **தந்தை**யர்களுக்கும்
**புனித சூசையப்பர் தின நல்வாழ்த்துக்கள்.**
**(01-05-2023)**

**புனித சூசையப்பரே!**
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

# கட்டளையைக் கடைப்பிடிப்போர்க்கு ஆசி!

“ நியமங்கள், முறைமைகளின்படி ஒழுகுங்கள்”

இணைச் சட்டம் 4: 1, 5–9

திருப்பாடல் 147: 12–13, 15–16, 19 (12a)

மத்தேயு 5: 17–19

**கடவுளின் வார்த்தைக்கு அழிவே இல்லை. அத்தகைய கடவுளின் வார்த்தைகளின்படி நடந்தால், எல்லா விதமான ஆசிகளையும் பெறலாம்என்கிறது இன்றைய இறைவார்த்தை.**

ஆண்டவராகிய கடவுள் இஸ்ரயேல் மக்களுக்குப் பல கட்டளைகளைத் தந்தாலும், அவர் அவர்களுக்குத் தந்த பத்துக் கட்டளைகள் மிகவும் முக்கியமானவை. இவற்றின்படி நடந்தால் வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டிற்குள் நுழைய முடியும். அதைவிடவும் இஸ்ரேயல் மக்கள் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடித்து வாழும்போது, அவர்கள் கடவுளின் மக்கள் என்பதைப் பிறவினத்தார் அறிந்துகொள்வர் என்று மோசே இன்றைய முதல் வாசகத்தில் குறிப்பிடுகின்றார்.

இன்று நாம் பதிலுரைப்பாடலாகப் பாடக்கேட்ட திருப்பாடல் 147, யூதா நாட்டினர் பாபிலோனிலிருந்து திரும்பி வந்தபோது, எருசலேம் திருக்கோயிலும் திருநகரும் எதிரிகளால் சிதைக்கப்பட்டிருந்ததைக் கண்டு, அவற்றை மீண்டுமாகக் கட்டியெழுப்பி, சுற்றிலும் சுற்றுச் சுவர் எழுப்பினர். அதை முன்னிட்டு விழாக் கொண்டாடினர். அப்போது பாடப்பட்டதுதான் இத்திருப்பாடல். மேலும் இது, ஆண்டவருக்கு அஞ்சி, அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது, கடவுள் நாட்டிற்குப் பாதுகாப்பையும், அவர்களது பிள்ளைகளுக்கு ஆசியும் வழங்குவார் என்கிறது

இஸ்ரயேல் மக்கள் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடித்து வாழவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டாலும், அவர்கள் மீண்டும் மீண்டுமாக அவற்றை மீறினார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து திருச்சட்டத்தின்படியும், இறைவாக்கின்படி நடந்தார். இவ்வாறு அவர் தன்னுடைய காலத்தில் வாழ்ந்த பரிசேயர்களைப் போன்று சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக இல்லாமல் (மத் 23:3) சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார் (லூக் 24:19).

நாம் இறைவார்த்தையைக் கேட்டு, அதன்படி நடக்க வேண்டும். அப்போதுதான் நாம் நற்செய்தியில் இயேசு சொல்வது போல, விண்ணரசில் பெரியவராக இருக்க முடியும்.

## பெயருக்குக் கிறிஸ்தவர்கள்!

தன்னுடைய நாட்டில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தபோதும் அவர்களின் வாழ்க்கை எல்லாருக்கும் முன்மாதிரியாய் இருப்பதைப் பார்த்து வியந்து போன ஒரு மன்னர், அவர்களை அழைத்துப் பரிசு கொடுக்க விரும்பினார். ஒரு குறிப்பிட்ட நாளில் மன்னர், நாட்டில் இருந்த கிறிஸ்தவர்களை ஓர் அரங்கத்தில் கூட்டிச் சேர்த்து, அவர்களுக்குப் பரிசு கொடுக்கத் தொடங்கினார். ஒருவர் மன்னரிடமிருந்து பரிசினைப் பெற முன் வந்தபோது, கூட்டத்திலிருந்து, ‘ இவர் கிறிஸ்தவரில்லை’ என்றொரு குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது.

அதைக்கேட்டு, பரிசு பெற வந்த மனிதரிடம் மன்னர், “ நீ கிறிஸ்தவர் இல்லையா?” என்று கேட்டபோது, அவர், “ நான் கிறிஸ்தவர்தான்” என்று வாதித்தார். உடனே மன்னர் அந்த மனிதரிடம் வேலை செய்யும் வேலையாள், அவரிடமிருந்து கடன் பெற்றவர், அவரது அண்டை வீட்டார் என்று மூவரை அழைத்து, அவரைப் பற்றி விசாரித்தார். வேலையாள், அந்த மனிதர் சரியாகக் கூலி தருவதில்லை என்றும், கடன் பெற்றவர், அவர் அளவுக்கு அதிகமாக வட்டி வசூலிக்கின்றார் என்றும், அண்டை வீட்டார், அவர் தன்னைப் பற்றி அவதூறாகப் பேசிக்கொண்டிருக்கின்றார் என்றும் சொன்னார்.

இதெல்லாம் கேட்டுச் சீற்றமடைந்த மன்னர் அவரிடம், “ நீ பெயருக்குத்தான் கிறிஸ்தவராக இருக்கின்றாயே ஒழிய, பெயர் சொல்லும் கிறிஸ்தவர் இல்லை. உண்மையில் நீ போலியான கிறிஸ்தவன். அதனால் உனக்குப் பரிசு எதுவும் தரப்பட மாட்டாது” என்று சொல்லி அனுப்பி விட்டார்.

**பெயருக்குக் கிறிஸ்தவராய் வாழ்வதில் என்ன பெருமை இருக்கின்றது? பெயர் சொல்லும்படி வாழ்வதில்தானே கிறிஸ்தவருக்குப் பெருமை இருக்கின்றது! நாம் எத்தகைய கிறிஸ்தவர்களாய் வாழ்கின்றோம்? சிந்திப்போம்!**

## ஆண்டவரின் வார்த்தை

“ இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்” (யாக் 2: 10)

## தீர்மானங்கள்

1) நம்முடைய வாழ்வாலும் வார்த்தையாலும் கடவுளுக்குப் பெருமை சேர்ப்போம்.

2) கடவுளின் ஆசியைப் பெற அவரது கட்டளையைக் கடைப்பிடித்து வாழ்வோம்

3) வாழ்வு தரும் வார்த்தையை அன்றாடம் வாசிக்க மறவாதிருப்போம்.

## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்

**பெல்வில் சிற்றாலயத்தில் நேரம்: 9:00க்கு**



07-05-2023

04-06-2023

02-07-2023

# உயிர்ப்பு - உயிர்+பூ

அருட்பணி: லெபோண் சுதன்

**ஒரு மாலை இரவு 8 அல்லது 8.30 இருக்கும் மதன் சுவாமியின் Viber தொ(ல்)லை பேசி அழைப்பு அதிர்ந்தது. “ என்ன சுவாமி” என்றேன். “ சும்மா சுகம் விசாரிக்க” என்றார். சும்மா வராதே..... என எண்ணிக்கொண்டிருக்கும் போதே..... “ அண்ணா ஒரு ஆக்கமொன்று எழுதி தாவன்” என்றார். அதுதானே பார்த்தேன் “ காரியமாகும் வரையில் கழுதையின் காலைப்பிடி” என எனக்குள் எண்ணிக்கொண்டேன். ஓ.. மன்னிக்கவும். இது என்ர mind voice, அய்யய்யோ எல்லாருக்கும் கேட்டிச்சிதோ? மதன் சுவாமி தன்னுடைய பணியில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார் அதுதான்.**

“ சரி கட்டுரையின் தலைப்பு என்ன?” இது நான். அவரது பதில் என்னை வில்லங்கத்துக்குள் தள்ளிவிடுகிற மாதிரி... “ இயேசு உண்மையாக உயிர்த்தவரா? என்றார் அவர்.

சரி... விடயத்துக்கு வருவோம்... கிறிஸ்துவின் உயிர்ப்பு தொடர்பாக எண்ணற்ற ஆய்வுகள், கருத்துகள், ஆன்மீக சொற்பொழிவுகள், சிந்தனைகள் என எதிரும் புதிருமாக, நேரும் மறையுமாக, ஏகப்பட்ட வடிவங்களில் கடந்த, கடந்து கொண்டிருக்கிற மற்றும் வரவிருக்கிற காலங்களுக்கும் “ இயேசு உண்மையாக உயிர்த்தவரா? என்ற இந்த கேள்வி பொதுவாக எக்காலத்திலும் கேட்கப்படுகிறதாகவே இருக்கும். எனவே அவற்றின் சிலவற்றினை தொட்டுக்கொண்டு இதை எழுதிக்கொண்டு போகிறேன்.

மனித, மற்றும் எந்த உயிரினம் இறந்தாலும், அவை உயிர்க்க முடியாது, அதை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது. ஆனால் அதிலிருந்து இன்னுமொன்று தோண்றும் அல்லது புதிய தொன்றுதான் உருவாக வாய்ப்புகளுண்டு. இதுதான் நியதி. இது இந்து, பௌத்த மற்றும் ஏனைய சில சமய வழிபாட்டு சத்தியங்களில் ஒன்றாகும்.

சாவு + வாழ்வு மனிதனுக்கும், சுவாசிக்கும் எந்த உயிர்களுக்கும் பொதுவானது. ஆனால் இது இரண்டு அல்ல, ஒரேயொரு யார்த்தம்தான். உள்ளே – வெளியே போய் வருகிறது “ உயிர் சுவாசம்” இதில் உள்ளே போவது வெளியிலோ வெளிச்செல்வது உள்ளேயோ நடைபெறவில்லை என்றால் நம்மள நாலு பேர் சுமந்து போக வேண்டி வரும். பரவாயில்லையா? சுவாசிக்க மறக்காதிங்கோ...

உயிர்ப்பு ஞாயிறு உலகின் பல பாகங்களில் பல்லினத்தவரால் கொண்டாடப்படுகிறது. இயேசுவின் கதை பேச்சுக்களில் உவமைகள் உறுதி மொழிகளில் விண்ணரசு பற்றிய உவமை களில் வேதாகமத்தின் உயிர்ப்பின் பின் புதிய ஏற்பாட்டுப்பதிவுகளில் கிறிஸ்துவின் உயிர்ப்பு பற்றிய பதிவுகளை வேதாகமத்தின் பல இடங்களின் காண முடியும்.

இதோ இந்த பகுதியில்........ **மத். 28:11–15** கல்லறை காவலர்களுக்கு இலஞ்சம் கொடுத்து நாங்கள் **11அவர்கள் போய்க்கொண்டிருந்த போது காவல் வீரருள் சிலர் நகரத்திற்குள் சென்று நிகழ்ந்தவை யாவற்றையும் தலைமைக் குருக்களுக்கு அறிவித்தனர். 12அவர்கள் மூப்பர்களுடன் கூடிக் கலந்து ஆலோசித்து அப்படை வீரருக்கு மிகுதியாகப் பணம் கொடுத்து 13 “ நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இயேசுவின் சீடர் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்றுவிட்டனர் எனச் சொல்லுங்கள்.**

அட சொன்னதுதான் சொல்லு, பொய் சொல்றதையும் பொருந்த சொல்லறதில்லையா! **“ நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இயேசுவின் சீடர் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்றுவிட்டனர் எனச் சொல்லுங்கள்.**

நீங்களே நல்ல நித்திரை... அதுக்குள்ள சீடர்கள் இரவில் வந்து... என கதை விடுகிறாங்கள். கண்விழித்து காவல் காக்கிறதுதானே உங்க வேலை... அதெல்லாம் விட்டுட்டு...

பிரபு லிற்றில்ரன் (Lord Lyttelton) மற்றும் கில்பேட் வெஸ்ட் (Gilbert West ) பரிசுத்த வேதத்தை நம்புகிறவர்களின் நம்பிக்கையை சிதைத்து சின்னாபின்னமாக்க முடிவு செய்து முயற்சியில் இறங்கினார்கள். லிற்றில்ரனுடைய பொறுப்பு சவுல் மனமாறியது பொய்யென நிரூபிப்பதும் கில்பேட் வெஸ்டினது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஒரு கற்பனை கதை என்று நிரூபிப்பதுமாகும் என முடிவு செய்தனர். இருவருமே தங்களுக்கு பரிசுத்த வேதாகமத்தின் இது குறித்து போதிய ஆதாரங்களில் தெளிவற்றவர்கள் என ஒத்துக்கொண்டு ஆராய்ச்சியில் இறங்கினர். அடிக்கடி இது பற்றி பேசிக்கொண்டனர். அதில் ஒரு தடவை லிற்றில்ரன் தன் நண்பர் கில்பேட் வெஸ்டிடம் மனந்திறந்து பேசினார். “ நாம் ஆராயும் இந்த காரியத்தில் உண்மை இருப்பதை உணர்கிறேன். அத்தோடு ஆராய்ச்சியின் முடிவை கண்டும் அதிர்ந்து போனேன் என்றும் சொன்னார். இந்த இரு சட்ட வல்லுனர்களும் ஆராய்ச்சியின் முடிவில் தமது நோக்கங்களுக்கு எதிர் மாறாகவே இரு பெரும் உண்மை யதார்த்தங்களை கடவுளுக்கு சார்பாகவே எழுதி முடித்தனர். அதாவது லிற்றில்ரன் (Lord Lyttelton) “ புனித பவுலின் மனமாற்றம்” எனவும் கில்பேட் வெஸ்ட் “ இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்” என்று இவை இரண்டும் முற்றிலும் உண்மையானவை என இரண்டு புத்தகங்களையும் எழுதி முடித்தனர்.

இயேசு உயிர்த்தார் என்று வாதாடுவது ஒரு பக்கமிருக்க இயேசு உண்மையாகவே இறந்தார் என்பதையும் ஆதார பூர்வாக நம்ப வேண்டும். அதற்கு வேதாகமமே பல பதிவுகளை தந்திருக்கிறது. இது இன்னுமொரு லிற்றில்ரன் (Lord Lyttelton) மற்றும் கில்பேட் வெஸ்ட்டும் (Gilbert West) தேவையில்லை வீட்டில அடிப்பெட்டிக்க கிடக்கிற வேதாகமத்தை நீங்களே எடுத்து கருத்தாக ஒவ்வொரு நாளும் வாசியுங்க அது போதும்.

பவுலின் திருமுகங்கள், அப்போஸ்தலர்களின் பணிகள் நான்கு நற்செய்தியாளர்களின் இறுதி அதிகாரங்கள் என ஏகப்பட்ட உண்மை சான்றுகள் வேதாகமத்துக்குள் அடங்கி கிடக்கின்றன. அதெல்லாம் சரி எங்கெங்க இருக்கு எண்டு உனக்கு தெரியாதோ? உங்கட mind voice எனக்கு கேக்கிறது... அதனால நானே ஒரு 10 நபர்களுடன் இயேசுவின் உயிர்த்தெழுதல் சம்மந்தப்பட்ட இடங்களை சொல்றேன் அதையாவது கொஞ்சம் பாருங்க...

யோவான் – 20:11–18
மத்தேயு – 28:1, மாற்கு 16:1, லுக்கா 24:10
லுக்கா 24:34, 1 கொரி. 15:5
லுக்கா 24:13 – 35
லுக்கா 24: 36 – 43, யோவான் – 20 19 –25
யோவான் – 20: 26 – 29
யோவான் – 21: 1 – 23
மத்தேயு – 28: 16 –17 1 கொரி. 15:7
லுக்கா 24:49 – 53, அப். பணி. 1:3 – 11

போதுமட சாமி, இதுக்கு மேல என்னால ஆதாரங்கள் தர முடியாது. இதுவே போதுமானது... உங்களனைவருக்கும் அர்த்தமுள்ள........

**என் இனிய கிறிஸ்து உயிர்த்த திருவிழா வாழ்த்துக்கள்.**

# மனமாற்றம் {கவிதை}



அன்று எரிகோ நகர வீதியால்
அன்பர் இயேசு வருகிறார் என்ற சேதி கேட்டதும்
குள்ளமனிதன் சக்கேயூ– துள்ளிக் குதித்து– வந்தானாம்
அண்ணல் இயேசுவைக் காணவே
ஆசை அதிகம் கொண்டானாம்

குள்ளனாக– பிறந்தது எனது குற்றம்– இல்லையே
அன்பர்– இயேசுவைக்– காண்பதில்
எத்தடைகளும் எனக்கில்லையே என்று
மனதில் எண்ணியே–– அருகில் நின்ற அத்திமரம்
அதில்– ஓர் கிளையில் புத்தியுடன் துள்ளிக் குதித்து
தாவியே ஏறி– அமர்ந்து கொண்டானாம்.

ஏற்ற வேளை வந்ததும்– வாழ்வளிக்கும் வல்லவர்
அவ்வழி– தனிலே வந்தாராம்
சக்கேயூவின்– இதயவாஞ்சை– அறிந்த– தந்தையோ
அத்திமரக்கிளையிலே – அமர்ந்திருந்த
சக்கேயூவை உற்று– நோக்கியே !
விரைந்து வாரும் அன்பரே உமது வீட்டில் இன்று
நான் விருந்து உண்ண உம்மை அழைக்கின்றேன்,
என்றாராம்,

இவ் வார்த்தைகளைக் கேட்டதும்– வியந்து போன சக்கேயூ–
பாவியான என்னையா– பரிவுடனே அழைக்கின்றீர்
ஆண்டவரே ! அன்புக்கு இலக்கணம் உம்மை அன்றி வேறு
எவர் உண்டு?
தயவு கூர்ந்து என்னை மன்னியும்
நொடிப்பொழுதில் வந்திடுவேன் எனக்கூறியே!
விரைந்து கீழே வந்ததும் இயேசுவின் பாதம் வீழ்ந்து
பணிந்து– வணங்கி– எழுந்து– நின்றானாம்.

இரக்கமுள்ள தந்தையோ!
விசுவாசமுள்ள என் அன்புக்கினிய பக்தனே
நீர் அன்பு வழி செல்லவும் அறநெறியில் வாழவும்
அடுத்தவர்க்கு மாதிரியாய் உம் வாழ்வு மாறவும்
நேர்மையான எண்ணங்கள் என்றும்
உம் சிந்தனையிலே பதியவும்
ஆற்றல் யாவும் தந்து நான் என் நீதியின் வலக்கரத்தால்
உம்மைத் தாங்குவேன் என்றாராம்! (லூக்: 19)

என் சிந்தனை, சொல், செயல்– யாவிலும்
பிறரின் அன்பை வெளிப்படுத்தியே
அனைவருக்கும் நல் நண்பராய்– ஐக்கியமாய்
நான் வாழ்ந்திட, ஏற்ற வரம் தந்தவரே!
எரிகோவின் மீட்பரே!
நான் செய்துகொண்ட பாவங்கள் வெகுவாய்
என்னைக் கொல்லுதே – தந்தையே! என்னை– மன்னியும்

“ மனமாற்றம்” – காண விளைகின்றேன்
ஏழை, எளியோர்– யாவரும் நலமுடனே
வாழ்ந்திட– நேசக்கரம் நீட்டுவேன்
பொய்க்குற்றம்– பலகூறியே– பிறர் பொருளை
நான் கவர்ந்ததால் பன்மடங்காய் திருப்பிக்
கொடுக்கின்றேன்
என் உடமைகளில் பாதியை துன்பம் உற்றோர் துயர்
துடைக்க உதவுவேன் என்று சகேயூ
மனம் கசந்து தேம்பி அழுதிட....

பாசமுள்ள தந்தையோ........
சக்கேயூவை பரிவுடனே வாரி அணைத்துமே
இன்று மனமாற்றம் உன்னில் காண்கின்றேன்
காலம் அறிந்து செயல்படு
பிறரின் அன்பில் நிலைத்து என்றும் வாழ்ந்திடு
இன்றே இந்த வீட்டுக்கு மீட்பு வந்து சேர்ந்தது
என்று நேசர் தயவாய்க் கூறிச் செல்கையில்.....

சக்கேயூ! என்றும் கிருபை நிறைந்தவர்
வாக்கு மாறா வல்லவர்
நல்வாழ்வு தந்த நல்லவர்
நான் வாழும் காலம் யாவிலும்
பிறரின் அன்பில் நிலைத்து வாழுவேன்
என்று புகழ்ச்சிக்கீதம் பாடியே
மனமாற்றம் பெற்றுச் சென்றானாம்.

**செல்வி சு. லூசியா மேரி**

# இயேசுவின் உயிர்ப்பு நம் உயிர்ப்பின் முன்னடையாளம்

அம்புறோஸ் பீற்றர் - மறையாசிரியர்

இயேசு என்ற ஒரு வைரவிதையை விதைத்து விட்டுப் போனார்கள். அது இன்று மண்ணைக் கிழித்துக் கொண்டு உயிர்த்து நிற்கிறது. ஆம் மண்ணில் விதைகள் என்றுமே புதைக்கப்படுவதில்லை, அவை விதைக்கப்படுகின்றன. இறைமகன் இயேசு ஒரு பஞ்சு என்று பொத்தி வைக்கப் பார்த்தார்கள். வேலி போட்டு முடக்கி வைக்க இயேசு என்ன வீட்டில் பூச்சியா..........

**–இவர் புது விடியல்–**

இலட்சியவாதிகள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள். இந்தப் பூமியில் பல மனிதர்கள் பிறந்தார்கள், உலகம் போற்றும் வண்ணம் உயர்ந்தார்கள். ஆனால் இறைமகன் இயேசு மட்டுமே இந்த உலகின் சராசரி மனிதனாக பிறந்தார். மனிதனை தூயவனாக உயர்த்தினார். சகமனிதனுக்காக உயிர்விட்டார். மீண்டும் உயிர் பெற்றார். இயேசுவின் உயிர்ப்பு என்பது இயேசுவின் சீடர்களால் புனையப்பட்ட கதையோ, வதந்தியோ அல்ல. மாறாக வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்வு, இயேசு உயிர்த்தார் என்பதற்கு விவிலியம் பல சான்றுகளை தருகிறது. குறிப்பாக, விவிலியத்தில் நான்கு நற்செய்தியாளர்களும் தங்களுக்கு உரிய பாணியில் இயேசுவின் உயிர்ப்பைப் பதிவு செய்கிறார்கள். மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவின் உயிர்ப்பின்போது இயற்கையில் நிகழ்ந்த மாற்றங்களைக் குறித்து குறிப்பிடுகிறார். மேலும் ஒரு வானதூதரின் வழியாக இயேசுவின் உயிர்ப்பை அறிவிக்கின்றார். நற்செய்தியாளர்கள் மாற்கும், லூக்காவும் விண்ணக மனிதர்களின் சாட்சியம் வழியாக அறிவிக்கின்றார்கள். ஆனால் யோவான் இயேசு உயிர்த்துவிட்டார் என்பதை மற்ற நற்செய்தியாளர்களைப் போன்று வானதூதர்களின் சாட்சியத்தின் வழியாக உறுதி செய்யவில்லை மாறாக "வெற்றுக் கல்லறை" என்ற அடையாளத்தின் வழியாகத் தெளிவுபடுத்தினார். கல்லறை வெறுமையாக இருந்தாலும் கல்லறை முழுவதும் உயிர்ப்பின் செய்திகள் நிரம்பி வழிந்தன.

**வெற்றுக் கல்லறையாய்? வெற்றியின் கல்லறையா?**

இந்தப் பூமியின் பரப்பில் வாழ்ந்த சராசரி மனிதர்களின் வாழ்வு கல்லறையோடு முற்றுப்பெறுகிறது. சரித்திரம் படைத்த ஒரு சிலரின் வாழ்வு கல்லறையைத் தாண்டி சரித்திரமாய் வரலாற்றுப் புத்தகங்களில் பதிக்கப்படுகிறது. ஆனால் இயேசுவிற்கோ கல்லறையே கருவறையானது. அவர் வாழ்வும் சிந்தனைகளும் காலத்தின் காலாவாதியாகி விட அவர் புதைக்கப்பட்டது, ஒரு சராசரி கல்லறையில் அல்ல.... அது ஒரு கருவறை அந்தக் கருவறை பெற்றெடுத்த கருத்துக்கள் தான் 2000 ஆண்டுகள் தாண்டியும் ஆயிரம் ஆயிரம் கிறிஸ்துவை இந்த மண்ணில் உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறது. இது வெற்றுக்கல் வரையல்ல, மாறாக பாவத்தை வென்று இயேசு உயிர்த்தார் என்ற "வெற்றியின் கல்லறை" வெறுமையாக இருந்தாலும் செய்திகள் பல நிரம்பி இருந்தன. வெற்றுக் கல்லறை இந்த உலகிற்கு உணர்த்திய செய்திகள் இறைமகன் இயேசு முன்னறிவித்தபடியே சாவை வென்று உயிர்த்துவிட்டார் இறை மகனுக்கும் மனிதர்களுக்கும், தடைக்கல்லாக, இருந்த பாவத்தை அகற்றிவிட்டார். கல்லறையில் காணப்பட்ட துணிகள் இறைமகன் இயேசு ஆன்மாவோடு மட்டுமல்ல, உடலோடு உயிர்த்துவிட்டார். என்பதை உறுதி செய்யகின்றன. இயேசுவின் உடலை யாரும் திருடிச் செல்லவில்லை என்பதை குறித்துக் காட்டுகின்றது.

கல்லறைக்குள் சென்றார். கண்டார் – நம்பினார் என்ற வார்த்தைகள் இயேசு தனி அன்பு கொண்டிருந்த சீடரின் ஆழ்ந்த விசுவாசத்தைக் காட்டுகின்றது. இயேசுவின் உயிர்ப்பை காணாமலே கண்டு கொண்டார். காணமலே விசுவாசம் கொண்டார். என்ற செய்திகள் வெற்றுக் கல்லறை முழுவதும் நிரம்பி வழிந்தன. நாமும் உயிர்போம்.

இறை மகன் இயேசுவின் உயிர்ப்பு நம் உயிர்ப்பின் முன் அடையாளம். ஆண்டவரின் இறுதி நாளில் நாமும் இறைமகன் இயேசுவைப் போன்று உடலோடும் ஆன்மாவோடும் நம் இறப்பிலிருந்து உயிர்ப்படைவோம் என்ற நம்பிக்கையை வளர்க்கிறது. மேலும் உண்மைக்காகவும் இறை மனித மதிப்பீடுகளுக்காகவும் நாம் வீழ்த்தப்படும் பொழுதெல்லாம் நாம் இயேசுவைப் போல மீண்டும் எழுப்பப்படுவோம். இறைவனுக்காகவும் சகமனிதர்களுக்காகவும் நாமும் இந்த மண்ணில் விதைக்கப்படும் பொழுதெல்லாம் விண்ணகத்தில் இறுதி நாளில் நாம் முளைப்போம் என்ற நம்பிக்கையையும் உறுதியையும் கிறிஸ்துவின் உயிர்ப்பு தருகின்றது.

சாவை வென்று உயிர்த்த இறைமகன் இயேசுவில் விசுவாசம் கொண்ட நாமும் திருமுழுக்கு வழியாக அவரோடு அடக்கம் செய்யப்பட்டு, அவரோடு உயிர்த்தெழுந்தோம். இதைத்தான் திருத்தூதர் பவுல் கொலோ 2: 12 – 13 இல் அழகாக குறிப்பிடுகிறார் மேலும், நாம் திருமுழுக்கின் வழியாக புதுப்படைப்பாக மாறியுள்ளோம். திருமுழுக்கின் வழியாக பாவத்திலிருந்தும் ஊனியல்புக்கு உட்பட்ட பழைய வாழ்விலிருந்தும் இருளின் ஆட்சிக்குரிய செயல்களிலிருந்தும் உயிர்ப்புப் பெற்றுள்ளோம். எனவே திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் உயிர்ப்பின் மக்கள், இறைமகன் இயேசுவில் உயிர்த்த மக்கள். திருமுழுக்கின் வழியாக நாம் பெற்ற உயிர்ப்பு தினம் தினம் புதுப்பிக்கப்பட வேண்டிய உயிர்ப்பு. இது தினம் தினம் நம் வாழ்வில் நிகழ வேண்டிய ஒரு தொடர் உயிர்ப்பு. அன்றாட வாழ்வில் சந்திக்கும் பாவ சூழல்களிலிருந்தும், பாவத்தின் கட்டுக்களிலிருந்தும் இறைவனுக்கும் சகமனிதனுக்கும் எதிரான மதிப்பீடுகளின் பிடியிலிருந்தும் அடைய வேண்டிய உயிர்ப்பு. இவ்வாறு கிறிஸ்துவின் உயிரிப்பு விழா, நாம் உயிர்த்தோம் என்பதை நினைவுபடுத்துகிறது. நாம் உயிர்ப்போம் என்ற நம்பிக்கையைத் தருகின்றது.

# 'தவக்காலைப் பகிர்வு'

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக புனித டொன் பொஸ்கோ கழக செல் வாழ் இளையோர்களின் ஏற்பாட்டில், பணியக இயக்குநர் அருட்பணி. போல் மத்தியூ மதன்ராஜ் அடிகளாரின் ஆலோசனை வழிகாட்டலுக்கமைய, செல்பணித்தள நிர்வாகமும் இணைந்து முன்னெடுத்த " தவக்காலப் பகிர்வு " நிகழ்வு 12.03.2023 அன்று செல்பணித்தளத்தில் நடந்தேறியது. "பசியாக இருந்தேன் உணவு கொடுத்தீர்கள், தாகமாக இருந்தேன், என் தாகத்தை தணித்தீர்கள் : அந்நியனாக இருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்............. மத்தேயு: 25 – 35 என்ற இறை இயேசுவின் கூற்றுக்கிணங்க, செல்பணித்தளத்தைச் சேர்ந்த இளையோர், வேலைவாய்ப்பில்லாதவர்கள், வதிவிட அனுமதியற்றவர்கள், தனிமையில் தவிக்கும் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களை வரவழைத்து வயிறார உணவளித்து, அவர்களோடு கலந்துரையாடி, மகிழ்வித்தார்கள் .வருகை தந்திருந்த விருந்தினர்களும் மனநிறைவுடன் கையெடுத்துக்கும்பிட்டு, நன்றியுடன் விடைபெற்றனர்.

ஒரு சமூகம் ஆரோக்கியமான நல்ல சமூகமாக வாழ்வதற்கும் மற்றவர்களை தனக்குச் சமமாக மதித்து வாழும் சமூகமாக எதார்த்தமாக வாழ்வதற்கும் அதன் இளமைப் பருவம் பண்படுத்தப்பட வேண்டும். மாணவப்பருவம் நன்கு செப்பனிடப்பட வேண்டும். அதற்கு சமூகத்தின் மேல் அக்கறையுள்ள, எதிர்பார்ப்பில்லாமல் அளவற்ற அன்பு செலுத்தக் கூடிய, ஒரு வழிகாட்டி அவசியம். அப்படிப்பட்ட ஒரு நல்ல ஆசானாக, அருட் தந்தையாக இளையோரின் வழிகாட்டியாக முன் நடக்கும் இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட்பணி போல் மத்தியு மதன்ராஜ் அடிகளாரை உறவுகள் குழு வாழ்த்துகிறது..














எனது அப்பாவின் பெயர் அல்பிரேட் ஜெரி.
எனது அம்மாவின் பெயர் ஜெனித்தா
எனது பெயர் ஜெசிக்கா. எனது வயது
பதினைந்து நான் உயர்நிலைப்பள்ளியில்
படிக்கிறேன். எனக்கு இரண்டுதங்கைமாரும்
ஒரு தம்பியும் இருக்கிறார்கள். நாங்கள்
அம்மம்மாவுடன் செபமாலை
சொல்லுவோம். நான் கிற்றார் வாசிப்பேன்
எனக்கு ஓவியம் வரைய விருப்பம்
எனக்குப் பிடித்த பாடம் பிரேன்சு, கணிதம்.





எனது பெயர் கிஷால்னி
எனது அப்பாவின் பெயர் கிருபாகரன்.
எனது அம்மாவின் பெயர் யசோதா.
எனக்கு ஒரு தம்பி ஒரு தங்கை. கிறிஸ்ரன், யதுஷால்னி
எனது வயது 8.
நான் CE 2 படிக்கின்றேன்.
நான் ஆர்ஜெந்தை தமிழ்ச்சோலையில் தமிழ்படிக்கின்றேன்.
எனக்கு மிகவும் பிடிக்கும் மொழி பிரெஞ்சு, தமிழ், ஆங்கிலம்.

"சிறுவர்களாகிய நாம் யேசுவைப் போல வாழ்வோம்."





எனது பெயர் வாகை.
எனது வயது 9.
எனது அப்பாவின் பெயர் அந்தோனிகேஸ்.
எனது அம்மாவின் பெயர் விஜிதா.
எனது அண்ணாவின் பெயர் வேவியன்.
நான் CM1 படிக்கின்றேன்.
நான் நன்றாக பாட்டுப்பாடுவேன்
நான் தமிழ் சோலையில் வளர் நிலை 3 ல்
படிக்கின்றேன்.
எனக்கு பிடித்த பாடம் கணிதம் மற்றும் தமிழ்.


எனது பெயர் ஜிந்துஷன்
எனது அப்பாவின் பெயர் சிவானந்தன்
எனது அம்மாவின் பெயர் மார்கிரேட் ஆன்ரூமரி.
எனது வயது 10.
நான் CM2 படிக்கின்றேன்.
நான் தமிழ் 3ம் ஆண்டு படிக்கின்றேன்.
பல் மருத்துவராக படிக்க விரும்புகின்றேன்.

விண்ணுக்கு வழியமைக்க விண்ணிறந்து
மண்ணுக்கு வரும் மன்னனை
மனம் திறந்து வரவேற்போம்.
அவரின் பிறப்பு சொல்லும் செய்தியை
கொண்டாடுவோம்.
நம் அகத்தை நற்பண்புகளால் அலங்காரம்
செய்வோம் சிறந்த பிறப்பு பெருவிழா
வாழ்த்துகள்.



## சின்னக் கரங்களே!

இப்பகுதியை அலங்கரிக்க உங்கள் கைகளால் வரைந்த வண்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கின்றோம். எனவே தயங்காமல் உங்கள் சித்திரங்களை எமக்கு அனுப்ப மறவாதீர்கள்……



# அனைத்துப் பீடப்பணியாளர்களுக்கான ஒன்று கூடல்



## EPINAY பணித்தள பணியக விழா



## புனித சூசையப்பர் பணியகவிழா — Noisy Champs



# அசாத்திய ஆற்றலோடு விளங்கிய 10 புனிதர்களில்

## 2வது புனிதர்



அசாத்திய ஆற்றலாடு விளங்கிய புனிதர்களில் இரண்டாவதாக வருபவர் புனித ஜெரால்ட் மஜெல்லா.
ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருக்கும் ஆற்றல் பெற்றவர். (Power of Bilocation)

தனது துறவி இல்லத்தின் சிற்றாலயத்தில் செபித்துக்கொண்டிருந்த அதே வேளையில் மற்றொரு இடத்தில் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

5-வது வயதில் தனியாகக் கோவிலுக்குச் சென்று மாதாவையும் அவர் மடியிலுள்ள குழந்தை இயேசுவையும் கண்டார். இயேசு கீழே இறங்கி மஜெல்லாவிடம் உரையாடிவிட்டு சுத்தமான ஒரு வெள்ளை நிற ரொட்டியை வழங்கினார். ஒவ்வொரு நாளும் இந்நிகழ்ச்சி நடந்தது. விவரம் அறிந்த பெற்றோர் ஆலயம் வந்தனர். இப்புதுமையைக் கண்ணாரக் கண்டனர்.

7-வயது நடக்கும்போது தாயுடன் கிராதிக்குச் செல்ல, நற்கருணை வழங்கிக்கொண்டிருந்த குரு இவருக்கு நற்கருணை வழங்கவில்லை. ஏமாற்றம் அடைந்தார். நற்கருணை மேல் அவருக்கிருந்த ஏக்கம், அன்றிரவு அவருக்கு காட்சியில் தோன்றிய புனித மிக்கேல் அதிதூத ரால் வழங்கப்பட்ட புது நன்மையால் தணிந்தது. பின்பு தூய ஆவியால் ஏவப்பட்ட பங்குகுரு, இவர் வாரத்திற்கு 3 தடவை நன்மை பெறும்படி ஏற்பாடு செய்தார்.

நற்கருணை பக்தியுடன், மாதா பக்தியும் சிறுவனிடம் மிகுந்திருந்தது. காலையும், மாலையும் மரியன்னையின் புனிதத்தன்மை குறித்து 3 அருள் நிறை மந்திரம் சொல்வார். சிறு வயதிலிருந்தே தினமும் ஜெபமாலை சொல்வார். சனிக்கிழமைகளிலும், அன்னையின் திரு நாட்களுக்கு முந்தைய இரவிலும் உபவாசம் இருப்பார். 12 வயதில் தனது கன்னிமையை அன்னைக்கு அர்ப்பணித்தார்.

உணவுக்கு முன்னும், பின்னும் 3 அருள் நிறை ஜெபம் சொல்வதையும், நீர் அருந்தும் போதும், ஒவ்வொரு மணி நேரம் முடியும்போதும் ஓர் அருள்நிறை ஜெபம் சொல்வதையும் பழக்கமாக்கி உத்தமதனத்தில் வாழ்ந்து பிறருக்கு முன் மாதிரியானார்.

புனித ஜோண் மரிவியானியும் இதே போன்று ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். ஒப்புரவு அருட்சாதனம் வழங்கும் பொருட்டு, ஒரே நேரத்தில் இரண்டு இடத்தில் இருந்ததாக சொல்லப்படுகிறது. கோடி அற்புதர் புனித அந்தோனியாரும் இதே போன்று, ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.

# இரங்கல் அஞ்சலி



## அருட்திரு: நீதிநாதன்

தொல்லைகள் அற்ற நெடுந்தூரப் பயணமொன்றில்,
ஆண்டவரை நேர்முகமாய் ஏறெடுத்து.....
அர்ப்பணிப்புடன் அருட்பணிகள் செய்திடும்,
வாய்ப்பு கிடைத்ததென வாஞ்சை கொண்டு,
விண்ணோக்கி விரைந்தீர்களா?

அருட்தந்தையே!♥

கண்முன்னே இருந்து விட்டு,
கண் இமைக்கும் பொழுதினிலே -நீர்
காணாமல் போனது ஏன்?
எம்மை, உம்மை பௌவியமாய்
வளர்த்தெடுத்த அன்புப் பெற்றோருடன்,
உற்ற சொந்த பந்தங்களும் அல்லலப்படுகையில்
அவர்கள் ஆறுதலுக்கோர் வார்த்தை சொல்ல
மாட்டீரோ?

அருட்தந்தையே!🥀

வாழ்வில் முழுமை அனைத்திலும் வேண்டும்,
இறை இயேசுவின் சித்தம்
இதுவெனக் கொண்டு வாழ்ந்திட வேண்டும்
என்பதனை மையப்பொருளாக்கி,
ஏழை எளியோர், முதியோர் வறியோர் என
பல இனத்தார் யாவருக்கும்,
ஏற்றம் மிக்க நல் நண்பனாய்
ஐக்கியமாய் நீர் வாழ்ந்த தருணங்கள்,
என்றும் எம் வாழ்வில் நிறைந்தவை,

அருட்தந்தையே !♥

ஆன்மீகத் தேவைகள் யாவையும்
பரிவுடன் வளர்க்கும், இறைத்தூதனாய் வலம் வந்து,
பலரின் வாழ்வு வளம் பெற உழைத்த

எம் அருளாளரே!🥀

தாகம் கொண்ட கலைமான்கள்
நீரோடை நாடித் தேடி ஓடுவது போல,
இறைச் சித்தமதை நிறைவேற்றும் வாஞ்சையுடன்- நீர்
விண்ணோக்கி விரைந்தாலும்,
என்றும் எம் உள்ளமதில்
நிலையாய் நிலைத்திருக்கும் உம் ஆன்மா
நித்திய அமைதியில் இளைப்பாறிட
நிதமும் இறைவனை இறைஞ்சுகின்றோம்..

# குருத்துவ வாழ்வின் 10வது ஆண்டில்......




## 26~01~2013 ~ 26~01~2023

**அருட்திரு: றொலி எல்வீஸ் திறேசோர்**

அவர்கள் 28–01–2023ல் தனது குருத்துவப் பணியின் பத்தாவது ஆண்டை, செவ்றோன் (**Sevran**) புனித மார்த்தா ஆலயத்தில் தனது பணியக மக்களுடன் மகிழ்சசிகரமாக சிறப்பாக கொண்டாடி முடித்தார். அவர் மேலும் இறையருள் பெற்று நல் ஆயுளுடன் வாழ அவருக்காக ஜெபித்து நிற்போம். மேலும் அவர் பணி சிறந்து விளங்க இலங்கைத் தமிழ் கத்தோலிக்கப் ஆன்மீகப் பணியகம் அவரை வாழ்த்தி நிற்கின்றது.



# கடவுளின் அன்பை அகிலமெங்கும் பரவச்செய்வோம்

அம்புறோஸ் பீற்றர் - மறையாசிரியர்

**'நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்'**

இது இயேசு தம் சீடர்களுக்கு சொன்ன வார்த்தைகள். சில நேரங்களில் கடவுளை கண்டபடி திட்டுபவர்களையும் கடவுளின் பிரசன்னத்தை கேள்விக்குறியாக்குவோர்களையும் சந்திக்கின்றோம். அவர்கள் ஒருமித்த குரலில் எழுப்பும் கேள்விகள் இவைதான்.

* தனிப்பட்ட நபருடைய வாழ்விலோ, பலருடைய அனுபவத்திலோ அல்லது இயற்கை சீரழிவினாலோ ஏற்படும் துன்பங்கள் ஏன்?
* சமுதாயத்தில் நிகழும் அநியாயங்கள், அக்கிரமங்கள் ஏன்?
* கடவுள் என்று ஒருவர் இருந்தால் இவற்றையெல்லாம் பார்த்து இரசித்துக்கொண்டிருக்கிறாரா?

கடும் புயலில் சிக்கிய கப்பல் ஒன்று கவிழ்ந்து போனது அதில் பயணித்த அநேகம் பேர் மாண்டு போயினர். எப்படியோ ஒருவர் மட்டும் தப்பித்து ஒரு நிலை அடைந்தார். அங்கு ஒரு சிறு குடிசை அமைத்து கிடைத்தவற்றை உண்டு உயிரைக்காத்து வந்தார். திடீரென ஒரு மன வேதனையினாலும் நொந்து போனார். கடற்கரையில் அமர்ந்து தன்னையும் தன்னைப்படைத்த கடவுளையும் சபித்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு இன்பங்கலந்த அதிர்ச்சி அவருக்குக் காத்திருந்தது. தொலைவில் கப்பலொன்றைக் கண்டார். அக்கப்பல் அந்தத் தீவை நோக்கி வந்தது. அம்மனிதர் கப்பல் மாலுமியிடம் நான் இங்கிருப்பதை எப்படி உணர்ந்தீர்கள்? என்று வினவ, அதற்கு மாலுமி 'நீ நெருப்பை உண்டாக்கி புகையை எழுப்பி உதவி கேட்டதை உணர்ந்து இப்பக்கம் வந்தேன்' என்றார்.

இந்த நபர் இறை பராமரிப்பினால் தீவை அடைந்து புயலிலிருந்தும், கப்பற் சிதைவிலிருந்தும் தப்பித்த விதம், இவற்றில் எல்லாம் கடவுள் தம்மோடு இருந்து தனக்கு உதவியதை உணரவில்லை. பல நேரங்களில் நாமும் இந்த மனிதரைப் போலத்தான் இருக்கின்றோம். ஆனால் கடவுள் நாம் எந்த நிலையில் இருந்தாலும் நம்மை அன்பு செய்பவர் நம்மை ஒருபோதும் அனாதையாக விட்டுவிடுவதில்லை. பால் குடிக்கும் குழந்தையை தாய் மறந்தாலும் 'நான் உன்னை மறக்கமாட்டேன்' என்று எசாயா 44:15 ல் கூறுவது கடவுள் அன்பை உணர்த்தவே. மனு உருவெடுத்த இயேசு தன்னுடைய வார்த்தைகள் புதுமைகள் வழியாக மக்கள் மீது தானும் மற்றும் இறைவனும் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தினார்.

தூய ஆவியானவர் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்துகிறார். நமக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குகிறார். நம்மோடு கடவுள் இருப்பதை உறுதிப்படுத்தும் இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது நாம் இயேசுவை அன்பு செய்ய வேண்டும் என்பதே. அப்படி அன்பு செய்வது உண்மையானால் அதனை நாம் செயல்களில் காட்ட வேண்டும். கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் வழியாக கடவுள்பால் நமக்குள்ள அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

ஆபிரிக்காவில் மறைபோதகப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியத் துறவியிடம் "உங்களுடைய தாய்நாட்டில் அநியாயங்களும், அக்கிரமங்களும் நிறைந்திருக்கும் நிலையில் ஆபிரிக்கர்களிடம் எப்படி அன்பைப்பற்றி போதிக்கிறீர்கள்?" என்று கேட்டனர். இதற்கு அந்தத் துறவியானவர் அளித்த பதில் அற்புதமானது. 'நாங்கள் ஆபிரிக்கா வந்து மக்களிடம் அன்பைப்பற்றி போதிப்பதில்லை. மாறாக அங்குள்ள மக்களை அன்பு செய்கிறோம்." என்பதாகும். இயேசுவின் கட்டளைகளில் தலை சிறந்தது ஒருவர் ஒருவரை அன்பு செய்யுங்கள் என்பதாகும். இயேசுவின் மீது அன்பு கொண்டிருந்த சீடர்கள் தங்களது நற்செய்திப்பணியில் அவ்வன்பை பிரதி பலித்தார்கள். தூய பவுலை புயலோ, வாளோ, வேலோ, துன்பமோ, துயரமோ கிறிஸ்துவின் அன்பிலிருந்து பிரிக்க முடியவில்லை.

இதுபோல பல தூயவர்கள் இயேசுவின் மீது தாங்கள் கொண்டிருந்த அன்பிற்காக தங்களது வாழ்வையும் உயிரையும் அர்ப்பணித்திருக்கிறார்கள். நீ எவ்வளவு நல்ல காரியங்களை செய்கிறாய் என்பது முக்கியமல்ல, மாறாக செய்யும் செயலை எவ்வளவு அன்போடு செய்கிறாய் என்பதுதான் முக்கியம். அன்புப் பணியாற்றிய அன்னை திரேசா இயேசுவின் அன்பைச் சுவைத்தவர். அவ்வன்பை துன்புறும் மானிடர்களோடு பகிர்ந்துகொண்டார்.

கருவறைகளே கல்லறைகளாகும் அபாயத்தைத் தாண்டி குறைபாடுகளோடு பிறந்த குழந்தைகள் முதற்கொண்டு கைவிடப்பட்டோர், நோயாளிகள், முதியோர் என்று சொல்லி அனைத்து தரப்பினரையும் இயேசுவின் அன்பை உணரச் செய்தவர் அன்னை திரேசா.

இப்போது கூட அவரது சபையைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான சகோதரிகளும், சகோதரர்களும், அருட்தந்தையர்களும் அதே பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றனர். நாம் இயேசுவை அன்பு செய்வது உண்மையானால் அவற்றை சக மனிதர்களை அன்பு செய்வதில் காட்ட வேண்டும். யோவான் எழுதிய முதல் திருமுகம் 4:20 இல் " கடவுளை அன்பு செய்வதாக எண்ணிக்கொண்டு தன் சகோதர சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தன் கண் முன்னே இருக்கும் சகோதர சகோதரிகளை அன்பு செய்ய முடியாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளை அன்பு செய்ய முடியாது" என்கிறார்.

இறுதியாக இறையன்பும், பிறரன்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. எனவே கடவுள் நம்மை அன்பு செய்கிறார் என்பதை உணர்ந்து, கடவுளை அன்பு செய்வதோடு தேவையில் இருக்கும் சக மனிதர்களையும் அன்பு செய்து கடவுளின் அன்பை அகிலமெங்கும் பரவச் செய்வோம்.

# குழந்தை இயேசு திருவிழா
## la Courneuve









# பொண்டி பணியகத்தில் சிலுவைப் பாதையுடன் தவக்காலத் தியானம்











அருட்பணி. ஜெயசீலன் சவரியார்பிச்சை ச.ச.

# உண்மையின் வேகம் நிதானம்

அருட்பணி. ஜெயசீலன் சவேரியார் பிச்சை ச.ச.

எங்கும் நிறைந்திருந்தது கையூட்டு. கறுப்புப்பணத்தின் கைவண்ணம். பணம் இருந்தால் பலன் நிச்சயம் என்ற மமதை மேலோங்க கையூட்டு இல்லாமல் எந்த வேலையும் நடக்காதோ! என்ற நெருடலோடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். மதிய வேளையிலும் மக்கள் கூட்டம் அங்கும் இங்கும் ஆரவாரத்தோடு அங்கலாய்த்துக் கொண்டிருந்தது. அவர்களின் முணுமுணுப்புகளிலிருந்து தெரிந்து கொண்டேன். வட்டாட்சியரின் ஒரு கையொப்பத்திற்கு ரூபாய் 1000 விலை பேசப்பட்டிருந்தது. முறையான கையெழுத்துக்கள் கூட வியாபார பண்டங்களாக பார்க்கப்பட்ட அவலம். அங்கிருந்த பலர் அதை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. தங்களுக்கு விரைவாக பாதகங்கள் இல்லாமல் வேலை நடக்கவேண்டும் என்பதற்காக கையூட்டை கையகப்படுத்தினர். அங்கே நடந்த நிகழ்வைப் பார்த்தால் கையுட்டு பெறுதல் ஒன்றும் குற்றமில்லையே என்று சித்தரிக்கப்பட்ட நிலையை உணர்ந்தேன்.

மனக்குழப்பத்தோடும் குமுறலோடும் என்ன செய்வது என்று எண்ணங்கள் கும்மியடிக்க கண்கள் அந்த அலுவலகத்தை வட்டமிட்டது. சட்டென்று எனது கண்கள் வலது திசையை நோக்கி விரிந்தது. ஒரு சிறிய வரிசை என் கவனத்தை ஈர்த்தது. வரிசையில் நின்று கொண்டிருந்தவர்கள் ஒரு சிலரே, ஆனாலும் அவர்களது வீராப்பும் வைராக்கிய பார்வையும் என்னை வெகுவாக கவர்ந்தது. அருகில் சென்றேன். வினவினேன். உண்மை அறிந்தேன். மனம் குளிர்ந்தேன். கையூட்டு செலுத்தாமல் கையொப்பம் வாங்க காலை முதல் காத்திருக்கும் இவர்கள் காலத்தைக் கடந்த காவிய மனிதர்கள். என்னையும் அவர்கள் வரிசையில் சேர்த்துக்கொண்டேன். எனக்குள் ஒரு புத்துயிர் இனம்புரியா மகிழ்ச்சி. மதியம் மாலையானது. வந்தவர்கள் அனைவரும் சென்று விட்டனர் ஆனால் எங்களது வரிசை சிறிதும் முன்னேறவில்லை. பசியின் மயக்கம் ஒருபக்கம், நின்றுகொண்டிருந்த கால்களில் கிறக்கம் மறுபக்கம், மனம் மட்டும் மார்க்கத்தை நோக்கி கம்பீரமாக காட்சியளித்தது. இறுதியில் வட்டாட்சியர் தனது அலுவலகத்திலிருந்து வெளியே வந்தார். எங்களை இதமாக முறைத்தார். ஏதோ உள்ளுக்குள் மௌனமாக முனங்கிவிட்டு சிறிது தயக்கத்தோடு தனது மண்டபத்திற்கு காரில் சென்றார். சிறிது நேரத்தில் திரும்பினார். எங்கள் அனைவரின் ஆவணங்களையும் ஒன்றாக எடுத்துச் சென்று கையொப்பமிட்டார். பின்பு வார்த்தை பரிமாற்றம் ஏதுமின்றி சட்டென்று கிளம்பிவிட்டார். இறுதியில் உண்மை வென்றது என்ற ஆனந்தம். ஆனால் அதன் வேகம் நிதானம் மட்டுமே என்றுணர்ந்தேன்.

அதிவேக அறிவியல் உலகில் உண்மையின் மிதவேகம் ஒரு வேகத்தடை. தடையில்லா வேகத்தை நோக்கி பயணிக்கும் மனிதன் தனது சொகுசு வாழ்க்கைக்கு பொய்மையின் வேகத்தை தன் வயப்படுத்துகிறான். "உண்மை சொல்லி என்னை காயப்படுத்துங்கள் ஆனால் பொய் சொல்லி என்னை ஆறுதல்படுத்தாதீர்கள். (Hurt me with truth> do not comfort me with lies) எனக்கு பிடித்தமான வரிகள் இவை. உண்மையை மதிப்பவர்களின் உயர் சிந்தனையின் உச்சகட்ட வரிகள் இவை. இன்றைய சமுதாய போக்கை சாடையாக படம் பிடித்துக் காட்டும் அற்புத வரிகள் இவை. நமது அன்றாட அதிவேக வாழ்க்கைக்கு சவால் விடுக்கும் நெஞ்சுரம் நிறைந்த உண்மை வரிகள் இவை. நமது தினசரி வாழ்க்கை சொகுசு நோக்கிய பயணமாகத்தான் இருக்கிறதே தவிர உண்மையை நோக்கி அல்ல என்பதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். சொகுசுதான் நமது இலக்காவும் இயக்கமாகவும் இருப்பது கவலை. சொகுசு நம்மை மழுங்கடிக்கும் நமது கண்களை மறைக்கும் கால ஓட்டத்தில் நம்மை சுக்குநூறாக உடைக்கும் என்பது கசப்பான உண்மை. பொய்மை தொடக்கத்தில் மாபெரும் ஈர்ப்பு இறுதியில் ஏய்ப்பு. உண்மை கசப்பு ஆனால் இறுதிவரை தோள்கொடுக்கும் உயிர் நட்பு. உண்மை ஒருவனை காயப்படுத்தலாம், ஆனால் வடுக்கள் இல்லா வாழ்வாதார காயங்களாக மட்டும் இருக்குமே தவிர வடுக்களால் வசைபாடும் காயங்களாக கட்டாயம் இருக்காது என்பது உறுதி.

கவலை என்னவென்றால் இன்றைய உலகில் பொய்யான வார்த்தைகளால் வருணனை செய்பவர்களை மதிப்பதும் உண்மை பேசுபவர்களை மிதிப்பதும் வாடிக்கையாக மாறிவிட்டது. உண்மையை மறைக்க ஒரு பொய்யை சொல்ல அந்த பொய்யை சமன்செய்ய மற்றொரு பொய்க்கு நம்மை இட்டுச் செல்ல, இறுதியில் பொய்மைக்கு சொந்தக்காரர்களாகும் நடைமுறை நீண்டுகொண்டே போகிறது. உடனடி உலகில் உண்மையின் மிதவேகத்தை முட்டுக்கட்டையாக பார்க்கும் அவலம். அதிவேக உலகம் அகிலம் கடக்கும் மனிதன் உண்மையின் மிதவேகத்தால் சோர்ந்துபோகிறான். உடனுக்குடன் நொடிக்கு நொடி என்று பறக்கும் மனிதன் குறுக்கு வழிகளை தனதாக்கிக்கொள்கிறான் பிறகு அதுவே அவன் அறமாகவும் மாறிவிடுகிறது. உடனடி மனிதனுக்கு நிதானம் ஒரு சறுக்கு. உயில்மேல் உள்ள உயிர் உணர்வு, உண்மைமேல் இல்லை என்பது இங்கு வருத்தமே. ஆனால் உண்மையின் வேகம் நிதானம் என்பதை மறந்து விடவேண்டாம். அது மெதுவாக தனது இலக்கை நோக்கிச் செல்லும். நமது விருப்பு வெறுப்புக்களை கடந்து செல்லும். மெதுவாக நகர்ந்தாலும் தனது உறுதியான போக்கில் உறைந்திருக்கும். வரலாறு என்பது உடனடி வரிகள் அல்ல, மாறாக பலநூறு போராட்டங்களைப் போர்க்களங்களைக் கடந்து வந்த சரித்திரத்தின் கனமான வரிகள். சொகுசு மனிதர்களுக்கு இந்த வரிகளின் காலக்கணக்குத் தெரியாது புரியாது. சரித்திர மனிதனாக வேண்டுமென்றால் வரலாற்று நிதானம் நமதாக வேண்டும். உண்மையின் வேகத்திற்கு நம்மை உறுதிசெய்ய வேண்டும். நிதானம் இழப்பவன் நிம்மதி இழக்கிறான். உண்மையின் வேகம் நிதானமே!




# இளையோர் வாழ்வில் சமரசப் போக்கு!

## வாழ்க்கையென்னும் ஓடம் வழங்குகின்ற பாடம்!

வேதியர் பேரா. தீ. ம. சந்தியாகு வேங்கிடக்குளம், இந்தியா

அன்று அருமைநாயகம் அமைதியின்றிக் காணப்பட்டார். நிமிடத்துக்கொரு தரம் வீட்டை விட்டு வெளியே வந்து வீதியைப் பார்ப்பதும், பின்னர் உள்ளே வந்து கண்ணாடியின் முன் நின்று தன் முகத்தைப் பார்ப்பதும் அடிக்கடி ஆசுவாசப்படுவதும் அவரது அன்றைய செயல்களாயிருந்தன.

அருமை மனைவி ரோசலின் என்ன சொல்லியும் அவர் கேட்காமல் காலை உணவு சாப்பிடவில்லை. இப்போது பகல் மணி இரண்டாகியும் மதிய உணவும் வேண்டாம் என மறுத்துவிட்டார். காரணம் ஒன்றும் புதிதல்ல. அடிக்கடி தம் மகன் அன்பு மணி தன் பேச்சைக் கேளாமல், தொழில் சம்பந்தமாகத் தான் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துப் போகாமல் தமது வணிகத் தொழில் துணையாளர்களுடன் வளர்ச்சிக்கான காரியங்கள் என தான் நினைக்கும் சில முக்கிய செயல்பாடுகளில் முரண்பட்டு நிற்பதுதான். இதுபோன்று பல தொடர் முயற்சிகள் தோற்றுப் போய்விட்டன. கடைசியாக நேற்று இரவு தன்னுடன் பேசியபோது “ அப்பா, நான் உண்மையிலேயே உங்கள் பிளளையென்று தனித்து அடையாளம் காட்டி, நம் குடும்பத்தின் பெயரைக் காப்பாற்ற வேண்டுமென்றால் ‘ நான் சிலருடன் சமரசம் ஆகாமல் இருப்பது நியாயம்’ என்பதை நீங்கள் ஏற்று, எனது சமூக நீதிப்பாதையில் நீங்கள் பயணிக்க வேண்டும். இதில் இழப்புக்கள் போல பல காணப்படலாம். நான் சொல்லுகிறேன் அவை இழப்பு அல்ல, ஒரு வேளை அவை சொத்துக் குவிப்புக்கு தடையாகக் காணப்படலாம். இதற்கு மேல் நான் எதுவும் கூறுவதற்கில்லை.” எனச் சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போனவன், இதுவரை எந்தத் தொடர்பிலும் குரல் கொடுக்கவில்லை. இதுதான் அருமைநாயகத்தின் மன உளைச்சலுக்குக் காரணம். மகன் சொல்வதில் உள்ள நியாயத்தை ஏற்பதா? மறுப்பதா? வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வும் ஒரு பாடம்தான். அதை அளவிடும் முறையும் கடக்கும் மனத்துணிவும் ஆளாளுக்கு வேறுபடுகின்றன.

### சமரசப் போக்கு சறுக்கலா? சாதனைப் பெருக்கலா?

இன்றைய உலக வரலாற்றில் தங்களை மகாத்மாக்களாக, மாபெரும் சாதனையாளர்களாக, அரிய ஆளுமையாளர்களாக, பெரும் பேறு பெற்றவர்களாக சுருக்கமாக ஜாம்பவான்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் பலரது வாழ்வைப் புடைத்தல் போட்ட நிகழ்வுகள் இந்தச் சமரசப் போக்குகள்தான். இவர்கள் சற்று நின்று நிதானமாகத் தமக்கு முன் வைக்கப்பட்ட பொருத்தமற்ற கோரிக்கைகளுக்குச் ‘ சமரசம்’ என்ற வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டு தங்கள் தோற்றத்தை மாற்றிக்கொண்டிருந்தால் இன்றைய பல புனித அடையாளங்களுக்கு வாய்ப்பிருந்திருக்காது என்பதே வெளிப்படையான உண்மை.

*தள்ளாத வயதிலும் பொல்லாதவர்களால் புறந்தள்ளப்பட்டாரே தத்துவ ஞானி சாக்ரட்டிஸ், அவர் விசக்கிண்ணத்தால் இந்த உலகத்தை விட்டே விரட்டியடிக்கப்பட்டாரே ஏன்?.....ஏன்?..... அவர் ஏதென்ஸ் நகர எடுபிடிகளின் கோபத்துக்குள்ளானாரே ஏன்....

*தென்னாபிரிக்க விடுதலைக்காக 27 ஆண்டுகள் சிறைவாசம் செய்த நெல்சன் மண்டேலா பலரது பசப்பல் மொழிகளுக்குப் பல் இளித்துச் சமரசம் ஆகியிருந்தால் அவர் எப்போதோ விடுதலையாகியிருப்பார்.

*“ என்னோடு பேசமாட்டாயா? உன்னை விடுதலை செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு, உன்னைச் சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் உண்டு என்பது உனக்குத் தெரியாதா” என்று மிரட்டியும் இயேசு பிலாத்துவுடன் சமரசம் ஆகவில்லையே ஏன்? அப்படிச் சமரசமாகியிருந்தால் விண்ணகத்தந்தையின் மைந்தர் இயேசு என்ற அடையாளம் என்னாவது? இயேசு கொண்டிருந்த இறையாட்சிக் கனவு என்னாவது? ஒருவேளை மேலும் ஒருசில ஆண்டுகள் இயேசு உயிருடன் வாழும் வாய்ப்புப் பெற்றிருக்கலாம்.

*சாதுர்யமான சமரசம் என்று பலர் தங்களது செயல்களுக்கு தாங்களே சான்றிதழ் கொடுத்துக்கொண்டாலும் அவர்களது சமத்துவமற்ற சமரசப் போக்கு இனத்தின், குடும்பத்தின், அலுவலகத்தின் குழுமத்தின் அழிவுக்குத்தானே அச்சாரமாக அமைந்திருக்கும்.

*பிரெஞ்சுப் புரட்சி முதல், தொழிலாளர் புரட்சி, அறிவியல் புரட்சி, போன்ற பல சமரசத்துக்கு இடமின்றி செயல்பாட்டு நுட்பத்தோடு செயல்பட்டால் மட்டுமே, வெற்றி கண்டன.

ஆம்! நான் சமரசமே தேவையில்லை என்றும் அது அழிவுக்கு மட்டுமே இட்டுச்செல்லும் என்றும், அதனால் ஆணவக் கொலைகள் உட்பட பல அநீதிகள் அரங்கேறும் என்றும் கூறிவிட முன்வரவில்லை. நலம் பயக்கும் நல்ல பல சமரசத் தேவைகள் உள்ளன. அவற்றை முன்மதியோடும், நுன்மதியோடும் அணுகவேண்டும். அவை செயல்பாட்டுக்கு வரும்போது இளையோரோ, இதர நிலையினரோ ஈகோ பார்த்து அடம்பிடிப்பதோ, வீண் கௌரவம் பார்த்து முரண்டு

முரண்டு பிடிப்பதோ. இதற்கு நான் சமரசம் ஆகிவிட்டால் எனது அடையாளம் என்னாவது என்று ஜம்பம் பேசுவதோ தேவையில்லை. அப்படிப்பட்ட சூழல்களை இனம்கண்டு, சமரசமாகி சரித்திரம் படைத்த சாதனையாளர்கள் பலர் வரலாற்றில் வலம் வருகின்றனர்.

பல சமயங்களில், பல நிகழ்வுகளில் இந்தச் சமரசப் போக்கு மிகுந்த பாதிப்புக்களை விளைவிக்கக் கூடியவை என்று கருதப்பட்டாலும், அவை சறுக்கல்கள்தான் என்று சான்றுரைக்கப்பட்டாலும், வேறு பல சமயங்களில் அவை மிகுந்த பலன் பெருக்கும் பாரம்பரியத்தொட்டில்களாகவே விளங்கியுள்ளன.

## இளையோரே எண்ணிடுவீர்! இறைவாக்கைத் தெரிந்திடுவீர்!

உலக வரலாற்றையும் மீட்பின் வரலாற்றையும் துலாவி ஆய்ந்தால் வியப்பே மிஞ்சும்! வெற்றியே கொஞ்சும்! ஆம் இமய ஆளுமை படைத்த, வளையாக் கழுத்துக்கொண்ட கொள்கைகாத்து கொடி உயர்த்திய பலர் காலத்தின் தேவைக்கும், கடிதே அழைக்கும் இறைகுரலுக்கும் செவிமடுத்துத் தங்களையே சமரசமாக்கிக்கொண்டார்கள். அதனால் புதிய வரலாறுகள் புறப்பட்டன. புரையோடிப்போன பல சமுதாயப் புண்கள் ஆற்றப்பட்டன. பொலிவும் வலியுமிக்க சமுதாயங்கள் மலர்ந்தன. மனத்தையும் இனத்தையும் வாட்டிய மரணபயங்கள் அகன்றன. ஆம் அத்தனையும் வரலாற்றுச் சுவடுகளாய் வளமிகுந்த பண்பாட்டுத் தொட்டில்களாய் காட்சியளிக்கின்றன. தகுதி வாய்ந்தவர்கள் என தம்மால் தேர்வுசெய்யப்பட்டவர்கள் தார்மீகத் துன்பத்தை முன்னிட்டு, தங்கள் கண்களுக்குத் தெரிந்த தகுதியற்ற நிலைப்பாட்டை எண்ணி மறுத்தபோதும், கடவுள் தம் திட்டத்தை மாற்றிக்கொள்ளவில்லை. அவர்களது நன்மனத்தையும் சம்மதத்தையும் சமரசத்தையும் பெற்றார். அவர்களைத் தமது கருவிகளாகப் பயன்படுத்தி தாம் செய்யக் கருதிய நன்மையைச் செய்தார். குறிப்பாகச் சிலரை கோடிட்டுக் காட்டுதல் நலமன்றோ?

*" வாயாய் நானிருப்பேன் வாய்யா பின்னே" என்ற பொருளில்தான் திக்குவாயன், நாக்குளறுபவன், நாவண்மையற்றவன் என்று பின்வாங்கிய மோசேயிடம் பேசி சமரசம் செய்தார் கடவுள். அவரது சமரசப் போக்கை ஏற்ற மோசே இஸ்ரயலின் விடுதலை வீரர் ஆனார். **(காண். விடுதலைப்பயணம் 4:10–17)**

*' தூய்மையில் சங்கமமாகு' என்ற தொனியில் தான் தூய்மையற்ற உதடுகளைக் கொணடவன் என்று கூறி தனது பணியிலிருந்து தப்பித்துக்கொள்ள நினைத்தவர் இறைவாக்கினர் எசாயா. அவரைக் குறட்டால் தூய்மை செய்து சம்மதிக்க வைத்தவர் நம் கடவுள். ' சமரசமே தீர்வு' என்ற பார்வை அங்கே பளிச்சிட்டது. **(காண். எசா 6:3–8)**

*' சிறுபிள்ளையா? சிறுபிள்ளைத் தனமா?' என்பது போல் இறைவாக்குப் பணியை ஏற்க மறுத்த ஏரேமியாசை நான் சிறுபிள்ளை என்று சொல்லதே..... என்று கூறி பக்குவமாய் பணியமர்த்தியவர்தான் நம் கடவுள். சமரசத்தின் மறுபெயர் – சாத்தியம்! **(காண். எரேமியா 1:4–10)**

*' நின்வே (way) நினிவே' – ஆம்! நினிவே நகருக்கு அனுப்பப்பட்ட யோனா செய்த திருகுதாளங்கள் நாம் அறிந்தவையே. அதனால் அவர் மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் இருந்து மானிட மகனுக்கே அடையாளமானார். வீணாய் பகைத்த யோனாவை சம்மதிக்க வைத்தார் கடவுள். சமரசம் என்பது உடன்பாடு **(காண். யோனா 1:4–17)**

*மானிடகுலத்தை மீட்கும் தன்மகன் இயேசுவின் தாயாக மரியாவைத் தேர்ந்தெடுத்தார் கடவுள். சமூகச் சிக்கல்கள் ஆயிரம் ஆயினும் சம்மதம் தந்தார் மரியா. ஆனால் அவர் சந்தித்த கஸ்டங்கள் ஏராளம். இதனால் ' இறைத்திட்டம் ஏற்ற மரியா' என்று சிறப்பித்து அழைக்கப்படுகிறார். **(காண் லூக்கா 1:26–38)**

*இயேசுவின் உள்ளியல்பை ஏற்க மறுத்த திருத்தூதர் பேதுரு, போதாக்குறைக்கு இயேசுவை அறியேன் என்றவர். அவரைத் திருஅவையின் தலைவராகத் தேர்ந்தெடுத்தார் இயேசு. அங்கே சம்மதம் தேவை எனப்பட்டது. **( மத்தேயு 16:13–20).**

*புதிய நெறியை பூண்டோடு அழிக்க போர்க்கோலம் தாங்கியவர் திருத்தூதர் பவுல். அவரது போக்கையும், நோக்கையும் மாற்றி தமது பணிக்கு ஆக்க சக்தியாகச் செயல்பட வைத்தவர் இயேசு. ஆம் பவுலின் சமரசம் பார் போற்றும் மனமாற்ற முழக்கம். **(திருத்தூதர் பணிகள் 9:1–18)**

## சமரசத் தராசால் சரித்திரம் படைக்க வாரீர். இளையோரே!

எந்தெந்த காலத்தில் என்னென்ன நடக்க வேண்டும் என்பதை சபை உரையாளர் பட்டியலிடுகிறார். **(சபை உரையாளர் 3:1–10).** நிகழ்பவை எல்லாமே இறைவனது திட்டத்தால் முன்குறித்து வைக்கப்பட்டுள்ளது என இயம்புகின்றது. எபேசியருக்குப் பவுலடியார் எழுதிய மடல் **(எபேசியர் 1:3–14).**

ஆகவே இளையோர் எந்தெந்த காரியங்களுக்கு, எந்தெந்தக் காரணங்களால் சமரசம் தேவைப்படுகிறதோ, அதனை முறையாகச் செய்ய தமது சமரசத்தை அளிக்கலாம். ஆனால் தமது சமரசம் ஒரு பெருங்கேட்டிற்கு வழிவகுக்கும் என அறிந்தால், அதனை விவேகத்தோடு, உயிர் பாதுகாப்போடு தவிர்த்தல் நலம். சமரசம் ஒரு தராசு. அது எப்பக்கமும் சாயாமல் இருக்கட்டும் என்றும் தமது உடனிருப்பால் இளையோரை ஊக்கப்படுத்தும் இறையாற்றல் என்றும் இளையோருக்குத் துணை நிற்பதாக!

# புதிர் தோட்டம் 85

1) கள்ளனுக்கு காவல் காற்றுக்கு தோழன் அது என்ன?

2) கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?

3) விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன?

4) தன் மேனி முழுதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கிய பேரைச் சீரழிப்பாள். அவள் யார்?

5) அரசன் ஆளாத கோட்டைக்கு பகல் காவல்காரன் ஒருவன், இரவுக் காவல்காரன் ஒருவன். அவர்கள் யார்

6) நான் பார்த்தால் அவன் பார்ப்பான், நான் சிரித்தால் அவன் சிரிப்பான். அவன் யார்?

படுத்து தூங்கினால் கண்முன் ஆடும். அடுத்து விழித்தால் மறைந்தே ஓடும் அது என்ன?

8) Weight இல்லாத House எது?
9) உயிர் இல்லாத விலங்கு எது?
10) உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன்

## புதிர் தோட்ட விடைகள் 84

1. பூட்டு
2. கடிதம்
3. எறும்பு
4. கடிகார முட்கள்
5. குடை.
6. தண்ணீர்
7. கத்தரிக்கோல்
8. நாக்கு
9. துடைப்பம்
10. தேன்கூடு

## உறவுகள் 85க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1) மரக்காலுக்குள்
2) ஒளி
3) மறைநூல் அறிஞர் ,பரிசேயர்
4) இறைவாக்குகளை
5) திருச்சட்டம்
6) தண்டனை தீர்ப்புக்கு ஆளாவார்
7)தம் சகோதர சகோதரிகளிடம் சினம் கொள்கிறவர்,
8) தலைமைச் சங்க தீர்ப்புக்கு ஆளாவார்,
9) எரி நரகத்திற்கு ஆளாவார்.
10) நீதிமன்றத்திற்கு.

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்: செல்வராஜா பரமேஸ்வரி

## 22-08-1942 - 11-03-2020

உடலில் சுமந்து உதிரத்தை உணர்வாய் ஊட்டி உன்
உயிரைப் பகிர்ந்து என் உருவம் தந்தாயே அம்மா!
இன்று எம் உடலும் உயிரும் உன்னையே
அழைக்கின்றது அம்மா அம்மா என்று............!
வாழும் காலத்தில் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
தனக்கென ஓர் இடத்தைப் பிடித்த தெய்வமே!
மூன்றாண்டு காலம் உருண்டோடி விட்டது.
நம்பமுடியவில்லையே.......

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!
ஆண்டு மூன்று சென்றாலும்,
ஆளாது எங்கள் மனம்
கண்ணீர்ப்பூக்களால் காணிக்கை செய்து
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிராத்திக்கிறோம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள், மருமக்கள்
உற்றார், உறவினர், நண்பர்கள்

# விவிலிய பொது அறிவுப்போட்டி 79 பரிசு பெறுபவர்கள்

### செபோனியாஸ் ஆகமம்

1) திருமதி: கெலன் அன்னவதி
2) திருமதி: றீற்றா செல்வரட்ணம்
3) திருமதி: உசா கிருபாகரன்

1) றீற்றா செல்வரட்ணம்
2) செல்வி: சியாமளா யோசவ்
3) திருமதி: றெஜினா பிறிஜற்
4) திருமதி: யேம்ஸ மரியறீற்றா
5) திருமதி: ரொபின் கூட் சகிலா
6) திருமதி: எம். என். செல்வநாயகம்
7) திருமதி: அன்று யோசப்பின்
8) திருமதி: தேவசகாயம் ஜெனற்
9) செல்வி: லூாசியா மேரி
10) திருமதி: மரிய றீற்றா
11) திருமதி: யேசுதாசன் மேரி ஜொய்சி
12) திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர்
13) யோண்சன் மேசி பீல்டா
14) திரு: அருளப்பு கிறிஸ்ரியன்
15) திருமதி: டிலானி டக்லஸ்
16) திருமதி: லோறன்ஸ் அன்ரனி யசிந்தா
17) திருமதி: வில்பிறட் யஸ்மி மெற்றில்டா

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி 79 சரியான பதில்கள்

**நீதித்தலைவர்கள் 1 - 21**

**இடமிருந்து வலம்**

1. நிழலில் 9:15
5. காட்டி 13:23
6. வான் 13:20
9. நாம் 19:11
11. எப்ராயீம் 7:25
13. போல 5:31
18. விடுதலை 3:9
29. புதல்வர் 21:14

**மேலிருந்து கீழ்**

1. நிறைவேறும் 13:17
2. இறந்து 10:5
3. திமினா 14:2
4. ஊழியம் 2:7
5. காப்பா 18:28
7. உம் 15:18
8. பேசாதே 18:19
11. எனவே 16:17
15. தூதர் 6:21
18. விட்டார் 18:10
20. ஆட்சி 11:19
21. ஒப்பு 18:10
24. நீதி 12:14
25. யுதா 1:19

**வலமிருந்து இடம்**

4. ஊதினர் 7:22
7. உன் 14:3
11. எது 14:18
12. தேனும் 14:8
13. போல் 16:12
14. நான்கு 19:3
18. வில் 10:17
20. ஆவி 11:29
23. பேர் 7:7
31. அவர் 19:4
33. தூாக்கு 8:21

**கீழிருந்து மேல்**

7. உன 16:5
9. நான் 15:7
10. வீட்டில் 17:4
11. எவ்வாறு 20:3
14. நாள் 19:4
16. தெபோரா 4:4
17. பெரும் 16:6
18. வில்லை 12:3
19. விடும் 16:17
20. ஆயிரம் 15:16
22. தீங்கு 19:23
26. மேலும் 20:26
27. கையில் 12:3
28. நீர் 11:10
30. வலிமை 6:12
31. குடி 5:13

## சிரி .சிரி ..



ஆசிரியர் - ஏன்டா வகுப்புக்கு லேட்?

பையன்- வீட்டில் அப்பாக்கும் அம்மாக்கும் சண்டை சார்.

ஆசிரியர்:- அவங்க இரண்டு பேருக்கும் சண்டைனா நீ எதுக்குடா லேட்டா வர்றா?

பையன்- என்னோட சூ (shoe) அப்பாகிட்ட இருந்திச்சு. இன்னொருரு சூ அம்மாகிட்ட இருந்திச்சு அதுதான் சார்.

# சிறுவர்களுக்கான விவிலிய வினா - 86

1)விண்ணுலகின் மேல் ஆணையிட வேண்டாம் என கூறப்படுவது ஏன்?
2)தம் மனைவியை விலக்குகின்றவன் எதனை கொடுக்க வேண்டும் ?
3)ஏன் மண்ணுலகின் மேல் ஆணையிடக் கூடாது ?
4)ஏன் எருசலேம் மீது ஆணையிடக் கூடாது ?
5)நேர்மையுள்ளோர், நேர்மையற்றோருக்கு கடவுள் என்ன செய்கின்றார்?
6)உங்கள் வலக்கன்னத்தில் அறைபவருக்கு என்ன செய்ய வேண்டும் ?
7) கண்ணுக்கு ---------------,--------------,பல் என்று கூறப்பட்டிருப்பதை கேள்விப்பட்டிருக்கிறீர்கள். இடைவெளிக்கு பொருத்தமான சொல் ?
8)கடன் வாங்க விரும்புகிறவர்களுக்கு யாது செய்யக்கூடாது ?
9) பகைவருக்கு யாது செய்ய வேண்டும் ?
10) எம்மை துன்புறுத்துவோருக்காக செய்ய வேண்டியது?

# விவிலிய அறிவுப்போட்டி - 80




## ஆகாய் - சக்கரியாஸ் ஆகமம்

1. இதோ யோசுவாவின் முன்பு நாம் நாட்டுகின்ற கல் இதுவே, இந்த ஒரே கல்லில் ஏழு கண்கள் ஒளிர்கின்றன. நாமே அதில் எழுத்துக்களைப் பொறிப்போம். என்று யாரால் கூறப்பட்டது?
2. “ நாம் உங்களோடு இருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்” இத்தூதுரையை அறிவித்தவர் யார்?
3. நெருப்பிலிருந்து எடுக்கப்பட்ட கொள்ளி என்று யார் குறிப்பிடப்படுகிறார்?
4. ஆண்டவனின் தூதர் சேனைகளின் ஆண்டவர் எத்தனை ஆண்டுகளாய் யெருசலேமின் மீது கோபத்தைக் காட்டியதாகக் கூறப்படுகிறது?
5. மன்னன் தாரியுசின் இரண்டாம் ஆட்சியாண்டில் பதினொராம் மாதத்தின் அதாவது ஷேபாத் மாதத்தின் இருபத்து நான்காம் நாள் ஆண்டவரின் வாக்கு யாருக்கு அருளப்பட்டது?
6. நாடு கடத்தப்பட்டவர்களுக்கு எழுந்து எங்கே ஓடும்படி ஆண்டவர் கூறுகின்றார்?
7. தாரியுஸ் மன்னனின் இரண்டாம் ஆட்சியாண்டில் முதல் நாளன்று யாருக்கு இறைவாக்கினர் ஆகாய் வாயிலாக ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது?
8. இரண்டாம் காட்சியில் வரும் நான்கு கொம்புகள் எதைக் குறிக்கின்றன?
9. யார் அழுக்குப்படிந்த உடைகளை அணிந்திருந்தார்?
10. ஒரே நாளில் அந்த நாட்டின் அக்கிரமத்தை அகற்றும் போது ஒவ்வொருவரும் தன் அயலானை எந்த கொடியின் கீழும், எந்த மரத்தின் கீழும் வந்து தங்கி இளைப்பாற அழைக்கப்படுவார்கள்?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் ~ 79

### பதில்கள் (செப்போனியாஸ் ஆகமம்)

1)பஞ்சனையில் சாய்ந்து கொழுத்திருப்போரைத் தண்டிப்பேன் 1:12

2) தலைவர்களையும், அரசனுடைய புதல்வர்களையும், வெளி நாட்டு ஆடை உடுத்தியவர்களையும் 1:8

3) யெருசலேமின் வணிகருக்கு எதிராக 1:10

4) ஏனெனில் ஆண்டவருக்கு எதிராக பாவம் செய்ததினால். 1:17

5) சீயோன் மக்களுக்கு 3:3

6) நிலப்பரப்பின் மேல் இருக்கும் யாவற்றையும் 1:2

7) புகலிடம் 2:3

8) யூதாவின் வீட்டாருள் எஞ்சியிருப்பவர்களின் சொத்தாகும். 2:7

9) வெள்ளியும் பொன்னும் 2:18

10) ஏனெனில் ஆண்டவரின் நாள் அண்மையிலுள்ளது

# மரியாஞ்சேனையின்
## 23 வது ஆண்டு விழா

எமது இலங்கைத் தமிழ் கத்தோலிக்க மரியாயின் சேனையருடைய 23 வது ஆண்டு திருவிழாத் திருப்பலி, கடந்த மார்கழித் திங்கள் 8 ம் நாள் மாலை நான்கு முப்பது மணிக்கு, செபமாலையுடன் ஆரம்பமானது. செபமாலையைத் தொடர்ந்து, சேனையின் அங்கத்தவர்கள் மெழுகுவர்த்தி யுடன் அணிவகுத்துச் செல்ல, எமது ஆன்மீகத் தந்தை அருள்பணி மத்தேயு போல் மதன்ராஜ் அடிகளாரின் தலைமையில் திருப்பலி ஆரம்பமானது.

தந்தை அவர்கள், அன்னை மரியின் தூய்மை வாழ்வு பற்றி மிகவும் அழகான, ஆழமான சிந்தனையாக பல கருத்துக்களை மறையுரையின் வழியாக நமக்குத் தந்தார்.

மைக்கேல் அஞ்சலோ என்ற ஓவியன், இதோ ஆண்டவரின் அடிமை என்ற பெயரில் அன்னைமரியின் வியாகுலம் மிகுந்த ஒரு ஓவியத்தை வரைந்தார். அந்த ஓவியத்தில் அன்னை மரியின் முகம் இளமைப் பொலிவுடனும், ஆண்டவர் இயேசுவின் முகம் சற்று, வயது முதிர்ந்த நிலையிலும் இருந்ததால், சிலர் ஏன் அவ்வாறு வரையப்பட்டதென ஓவியனிடம் கேள்வி கேட்டார்கள், அதற்கு அந்த ஓவியன், அன்னை மரி மாசு மறுவற்றவள், எப்பவும் தூய்மை நிலையுடன் இருப்பவர்கள் என்றுமே இளமைத் தோற்றத்தில் இருப்பார்கள், ஆண்டவர் இயேசு மனிதர் அனைவரினதும் பாவங்களைச் சுமந்ததினால், அனைவரதும் பாவத்தால் அவரது முகம் வயது முதிர்ந்த தோற்றம் என்றும் ஓவியன் விளக்கம் கொடுத்தான். இப்படி அன்னையின் தூய்மை வாழ்வு பற்றி, விவிலிய ஆதாரங்களுடன் பல தகவல்களை ஆன்மீகத் தந்தை அவர்கள் கூறினார். அன்னைமரியின் வழியில் நாமும் பயணிக்க எமக்கும் பல சிந்தனைகள் முன்வைக்கப்பட்டது. தொடர்ந்து சேனையினரின் அர்ப்பணிப்பும், திருப்பலி முடிவில் அன்னையின் பவனியும், ஆசியும் இடம்பெற்றது.

திருப்பலி நிறைவில் சேனையின் செயலாளர் நந்தா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஆலய கீழ் மண்டபத்தில் சிறியதொரு தேனீர் உபசாரமும், நிகழ்வும் இடம் பெற்றது. அமலமரித் தியாகிகளின் தினமாக அன்றைய நாள் கொண்டாடப் படுவதால், ஆன்மீகத் தந்தை அவர்களும் கேக் வெட்டி, மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது.

தலைவர் உரை, கவிதை, நடனம், நாடகம் சேனை அங்கத்தவரால் வழங்கப்பட்டது. சிறுமியின் நடனம், இறுதிப் பாடலுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

“அமலமே நீயானதால்
அனைத்துலகின் அன்னையானாய்,
அன்னையே உன்தாள் பணிந்து
அன்பாக வணங்குகிறோம்,
அவனியில் அமைதி நிறைய
அருள் தாரும் அம்மா.”



# குறுக்கெழுத்து புதிர்

**போட்டி இலக்கம் 80**

**ரூத்து 1-4 அதி: - 1சாமுவேல் {1-14 அதி:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | | 3 |
| | 4 | | | 5 | | | 6 | | |
| | | 7 | ★ | | | 8 | 9 | | |
| | 10 | | ★ | 11 | 12 | | | 13 | |
| 14 | | | 15 | | | | | | 16 |
| 17 | | | | | | | | 18 | |
| | 19 | 20 | | | | 21 | 22 | | |
| 23 | | | | 24 | | | | | 25 |

**இடமிருந்து வலம்**

1. உனக்கு முழு நிறைவான.............அருள்வார்.
4...........உனக்கு——மேலானவன் அன்றோ.
6. கடவுளின்..........…..கைப்பற்றப்பட்டது.
9...........ஆண்டவருக்கு ஒரு பலிப்பீடம் எழுப்பினார்.
10. ……..எரிபலியாகச் செலுத்தி——மன்றாடினார்.
14..........புலரும்வரை இங்கேயே படுத்திரு.
17. கொடுக்கல் வாங்கல்..........…பெறும்போது…
18. ஒரே..........தான் ஏற்பட்டது.
22..........யாரையும் கொல்லக்கூடாது.
23. இங்கே வந்து............உட்காரும்.
24. யோசுவாவின்................ உள்ளது.
28. காவலுக்குச்............முயன்ற———.
30. உம்.............உம் கண்முன்னே
32. அவருக்கு மட்டுமே.............செய்யுங்கள்.

**வலமிருந்து இடம்**

2. எங்கள் மீது ஓர்................ஏற்படுத்தும்.
3............. அடையாளமாய் இருக்கும்.
5............சிலை ஆண்டவரின் பேழைக்கு முன்
7..........அவருடைய வாயைக் கவனித்தார்.
9...........அவனை யாரும் அதட்ட வேண்டாம்.
15. பெலிஸ்தியர்...........பேரிடி முழுங்கச் செய்து
19...........நாங்கள் சாட்சிகள்.
22................ யார் வீட்டுப் பெண்.
25..............எக்காளம் ஊதுவித்தார்.
33. நீர் இப்பொழுதே............

**மேலிருந்து கீழ்**

1. ஆண்டவரும் உங்களுக்கு............காட்டுவாராக.
2...........லாவுக்குப் பிறந்த பெக்கோராத்தின்
3. நாம் ..........கடவுளை அணுகுவோம்.
7.............எங்களுக்கு தவணை தாரும்.
8. காத்து ............
9. மாட்சி...............விட்டது.
12. திருவுள்ளத்தை............செல்வோர்
13. புதுவாழ்வுனக்கு அன்னவன்................
15. எல்லைப் பகுதியை...............கொண்டனர்.
16.............ஆணையிட்டுக் கூறுகிறேன்.
17..........எதிரிகள் கையினின்று நம்மைக் காக்கும்.
22. உமது இல்லமே எனது............
24. அறு......... தொடங்கியிருந்தது.
25..........செல்வோம்.
26.........யும் மழையும் அனுப்பினார்.
27. உன் கைக்கு வந்ததை நீ செய்து............
29. போர்வையை விலக்கிவிட்டு..........த்துக் கொள்.

**கீழிருந்து மேல்**

7. படையல்களையும் துச்சமாய் மதிப்பது............
8. ஆண்டவரின் ஆவி உன்மேல்...............யோடு வரும்.
11. சவுலுடன்..........யில் பேசிக்கொண்டிருந்தார்.
12............நாங்கள் உம்மிடம் சரணடைவோம்.
14. உன்னைத் திருப்................செய்துள்ளார்.
16.............ப் பேச வேண்டாம்.
20. நான் தான் ஐயா............….
21. நான் சொல்............... கவனமாய்க் கேள்.
24. நீதி.............ஓர் அரசனைத் தாரும்.
30. ஆண்டவர் பற்றிய..........மக்களை ஆட்கொண்டது.
31............. வீட்டுப் பெண்

## சிரிக்கலாம் வாங்க

ஒரு அம்மா அப்பாவிடம் சொல்றாங்க.....இதோ பாருங்க நம்ம பையன் எங்கே பணம் வைத்தாலும் எடுத்திடுறான். என்ன பண்றதுன்ங்க?

அப்பா யோசனை பண்ணினார் அப்புறம் சொன்னார்.அவன் கண்ணிலே படாத இடம் நம்ம வீட்டிலே ஒரே இடம்தான். அங்கே பணத்தை வை திருட்டுப் போகாது என்றார்.

அது எந்த இடம்? என்றாங்க அம்மா

“ அதுதான் அவனுடைய பாடப்புத்தகம். அதிலே வை அதைத் தொடவே மாட்டான்” என்றார் அப்பா.

**குறுக்கெழுத்து போட்டியின் விடைகளை தயவு செய்து 05-06-2023 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி**

## இறைவார்த்தை

திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம் அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். விண்ணும் மண்ணும் ஒழிந்து போகுமுன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒரு புள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.மத்:5: 17-19

# பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**10-06-2023 சனி 9 மணியிலிருந்து**
**11-06-2023 ஞாயிறு 9 மணியிலிருந்து திருமண அருட்சாதன வகுப்பு, பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்.**

**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.



### வளர்ந்தோருக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு

சித்திரை: புதன் 26ந் திகதி - 17:30-18:30
சித்திரை: சனி 28ந் திகதி - 17:30-18:30
வைகாசி: புதன் 24ந் திகதி - 17:30-18:30
வைகாசி: சனி 27ந் திகதி - 17:30-18:30
ஆனி: புதன் 21ந் திகதி - 17:30-18:30
ஆனி: சனி 24ந் திகதி - 17:30-18:30

### சிறுவர்களுக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு

சித்திரை: புதன் 25ந் திகதி - 18:30 - 20:00
சித்திரை: சனி 28ந் திகதி - 18:30 - 20:00
வைகாசி: புதன் 22ந் திகதி - 18:30 - 20:00
வைகாசி: சனி 25ந் திகதி - 18:30 - 20:00
ஆனி: புதன் 22ந் திகதி - 18:30 - 20:00
ஆனி: சனி 25ந் திகதி - 18:30 - 20:00

**பெல்வில் ஆலயத்தில் நடைபெறும்**

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 79

### வெற்றியாளர்கள்

1) திருமதி: றொபின் கூட் சகிலா
2) திருமதி: மேரி பீல்டா யோண்சன்

ஏனையவர்கள்:

1) திருமதி: நீற்றா செல்வரட்ணம்
2) திருமதி: உசா கிருபாகரன்
3) யே. மேரி ஜொய்சி
4) செல்வி: சியாமளா யோசவ்
5) செல்வி: லுசியா மேரி
6) திருமதி: அருளப்பு கிறிஸ்ரியன்
7) செல்வி: சியாமளா யோசவ்
8) திருமதி: கொன்சன்றைன் கருணாமலர்
9) திருமதி: தேவசகாயம் ஜெனற்
10) திருமதி: றொபின் கூட் சகிலா
11) திருமதி: பிறிம்றோஸ் டயஸ்
12) திரு: செல்வநாயகம்
11) திருமதி: டிலானி டக்லஸ்
12) திருமதி: வில்பிறட் யஸ்மின் மெற்றில்டா

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

## சித்திரை - பணியகத் திருப்பலிகள்

**02-04-2023** - திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு
09:00 - Eglise Ste.Genivieve - 95140 - Garges Sarcelles
09:00 - Notre Dame de Blanc - Mesnil
12:30 - Eglise St. Joseph des Nations - Goncourt Paris

## புனித வார திருவழிபாடுகள்

**06.04.2023** - புனித வியாழன் திருப்பலி
18h30 Chapelle Notre Dame Réconciliatrice

**07.04.2023** - புனித வெள்ளி வழிபாடு
16h00 - Église Saint Joseph des Nations - Goncourt - Paris

**08.04.2023** - பாஸ்கா திருவிழிப்பு
16h00 - Église Saint Joseph des Nations
18h00 - Église Sainte Geneviève de Garges-les-Gonesse

**09.04.2023**
**ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழா**
12h30
Église Saint Joseph des Nations
12h30
Église Notre Dame du Blanc




## வைகாசி - பணியகத்

**01.05.2023** - புனித சூசையப்பர் திருவிழா
12h30 -Église Saint Joseph des Nations
17h00 -Église Saint-Martin Noisy-le-Grand

**14.05.2023** - புனித பாத்திமா அன்னை திருவிழா
11h30 - Chapelle Notre Dame Réconciliatrice
17h00 - Chapelle Sainte Marie

**21.05.2023** - புனித பிலிப்பு நேரியார் திருவிழா
11h30 - Chapelle Notre Dame Réconciliatrice

**28.05.2023** - சாட் திருத்தல திருப்பயணம்
14h30 – Cathédrale Notre-Dame du Chartres

## ஆனி - பணியகத் திருப்பலிகள்

**13.06.2023** - புனித அந்தோனியார் திருவிழா
15h30 - Eglise Saint Joseph des Nations

**13.06.2023** - புனித அந்தோனியார் பணித்தளவிழா
18h00 - Eglise Sainte Geneviève de Garges-les-Gonesse

**25.06.2023** கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா
16h00 - Notre-Dame-de-France - 95560 Baillet-en-France

**25.06.2023** - கிறிஸ்துவின் திருஇருதய விழா
11h30 - Chapelle Notre Dame Réconciliatrice

## புனித டொன்பொஸ்கோ திருவிழா - இளையோர்








## புனித யோசப் தந்தையர்களின் விழா



உழைத்துக் களைத்து ஒய்ந்த நாம், எமது வயோதிபக் காலங்களில் எதிர்நோக்குகின்ற உளவியல் ரீதியான தாக்கங்களில் இருந்து விடுபட்டு ஆன்மீக, சமூக ரீதியான பணிகளில் எம்மை ஈடுபடுத்தி, எமது வாழ்நாட்களை மகிழ்வுடன் களிப்பதற்கு 07–05–2023 அன்று கொங்கூர்ட் புனித சூசையப்பர் ஆலயத்தில் உருவாகிய இம்மன்றம் உறுதுணையாக அமைந்துள்ளது என்பதுடன், எம் மன்றத்தில் உள்ள அனைத்து அங்கத்தவர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், மகிழ்வுடன் கூறி, சிந்தையில் தோன்றிய தன் எண்ணத்தை செயல்படுத்தி, சூசையப்பர் மன்றத்தை உருவாக்கிய எமது ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட் பணி: போல் மத்தியு மதன் ராஜ் அடிகளார் அவர்கட்கும் எம் மன்றம் சார்பில் மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், கூறி நிற்க்கின்றோம்.

